


# தின பூமி

thinaboomi.com








**பிரிக்ஸ் அமைப்பின் 16-வது உச்சி மாநாடு ரஷ்யாவில் இன்று தொடங்குகிறது**

...2-ம் பக்கம்

**நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உலகின் நம்பிக்கை ஒளியாக இந்தியா திகழ்கிறது: பிரதமர்**

...3-ம் பக்கம்

**உலகக்கோப்பை வில்வித்தை போட்டி: 5-வது முறை வெள்ளி வென்றார் இந்திய வீராங்கனை தீபிகா குமாரி**

...7-ம் பக்கம்





● சென்னை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில், 31 புதுமண ஜோடிகளுக்கு திருமணத்தை நேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்.

### தலா 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில் சீர்வரிசை:

# 379 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைத்தது தமிழக அரசு

## சென்னையில் 31 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார் முதல்வர்

சென்னை, அக். 22-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (அக்.21) சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: இந்து சமய அறநிலையத்துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

மேலும், கோயில்கள் சார்பில் கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்களை நிறுவி அறப்பணிகளை மேற்கொள்ளுதல், சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும் விழா எடுத்து சிறப்பு செய்தல், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஜோடிகளுக்கும், மாற்றுத்திறனாளி ஜோடிகளுக்கும் சீர்வரிசைகளை வழங்கி திருமணம் செய்து வைத்தல், மகா சிவராத்திரி மற்றும் நவராத்திரி பெருவிழாவினை பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்புற நடத்துதல் போன்ற பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, கோயில்கள் சார்பில் 500 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்திடும் வகையில் கடந்த 4.12.2022 அன்று தமிழக முதல்வர் 25 ஜோடிகளுக்கு தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் மொத்தம் 500 ஜோடிகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 2023-2024 ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, "பொருளாதாரத்தில் பின்தங்கிய ஜோடிகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50,000 மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்களுடன் 600 ஜோடிகளுக்கு திருமண விழா நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக தமிழக முதல்வர் 7.07.2023 அன்று 34 ஜோடிகளுக்கு திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 2022-2023 ஆம் நிதியாண்டில் 500 ஜோடிகளுக்கும், 2023-2024 ஆம் நிதியாண்டில் 600 ஜோடிகளுக்கும், என மொத்தம் 1,100 ஜோடிகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் நிதியாண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் "பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 ஜோடிகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000 மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 31 ஜோடிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்றையதினம் (அக்.21) திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார்.

சென்னை உட்பட மாநிலம் முழுவதும் நேற்று மட்டும் மொத்தம் 379 ஜோடிகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. ஜோடிகளுக்கு மாங்கல்யத்துடன் சீர்வரிசைப் பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் எரிவாயு அடுப்பு, வெட்கிரைண்டர், மிக்சி, குக்கர், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன, என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒரு பவுன் ரூ.58,400-க்கு விற்பனை:

# தொடர்ந்து புதிய உச்சம் தொடும் தங்கம் விலை

சென்னை, அக். 22-

ஒரு பவுன் ரூ.58,400-க்கு விற்பனையாகி தொடர்ந்து புதிய உச்சம் தொட்டுள்ளது தங்கம் விலை. தங்கம் விலை மார்ச் மாதம் சவரனுக்கு ரூ.50 ஆயிரத்தை கடந்த நிலையில், 2 மாத இடைவெளியில், அதாவது மே மாதத்தில் ரூ.55 ஆயிரம் என்ற நிலையையும் கடந்து புதிய உச்சத்தை தொட்டது. தொடர்ந்து விலை அதிகரித்து வந்த நிலையில், கடந்த ஜூலை மாதம் 23-ந் தேதி மத்திய பட்ஜெட்டில் தங்கத்தின் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால், அதன் விலை அதிரடியாக சரிந்தது. அன்றைய நாளில் மட்டும் பவுனுக்கு ரூ.2,200 குறைந்திருந்தது.

அதன் தொடர்ச்சியாகவும் விலை சரியத் தொடங்கி கடந்த ஆகஸ்டு மாதம் ரூ.50 ஆயிரத்து 640-க்கு வந்தது. ஒரு கட்டத்தில் ரூ.50 ஆயிரத்துக்கு கீழ் செல்லும் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் அந்த நிலை அப்படியே மாறியது. எந்த அளவுக்கு குறைந்து வந்ததோ, அதே வேகத்தில் மீண்டும் உயர ஆரம்பித்தது. ஒரே வாரத்தில் பவுனுக்கு ரூ.2 ஆயிரம் வரை அதிகரித்தது. அதன் பின்னரும் விலை உயர்ந்து, கடந்த மாதம் (செப்டம்பர்) ரூ.55 ஆயிரத்தையும் தாண்டியது. மேலும் விலை ஏறுமுகத்தில் காணப்பட்டு, ரூ.56 ஆயிரம் என்ற நிலையையும் கடந்தது. இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து ரூ.56 ஆயிரம் முதல் ரூ.57 ஆயிரம் வரையில் ஏற்ற, இறக்கத்துடன் இருந்து வந்தது.

இந்த ஏற்ற, இறக்கத்துக்கு கடந்த 16-ந் தேதி ஒரு முற்றுப்புள்ளி வைத்தது போல, ஒரு சவரன் ரூ.57 ஆயிரத்தை கடந்தது. ரூ.57 ஆயிரத்தை கடந்த 3-வது நாளில் ரூ.58 ஆயிரத்தையும் தங்கம் விலை தாண்டி அதிர்ச்சியை கொடுத்துவிட்டது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் விலை நேற்று முன்தினம் சவரன் ரூ.58 ஆயிரத்துக்கு 240-க்கு விற்பனையானது. இந்நிலையில் நேற்று சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.58 ஆயிரத்து 400-க்கு விற்பனையானது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ரூ.7,300-க்கு விற்பனையானது. வெள்ளி விலையில் நேற்று மாற்றம் இல்லை. வெள்ளி விலை

(கடைசி பக்கம் பார்க்க)

### தீபாவளி: வரும் 28-ம் தேதி முதல் 3 நாட்களுக்கு

# தமிழகம் முழுவதும் 14,086 சிறப்பு பஸ்கள் இயக்கம்

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் அறிவிப்பு

சென்னை, அக். 22-

தீபாவளி பண்டிகைக்காக சொந்த ஊர் செல்லும் மக்களுக்காக அக்.28ம் தேதி முதல் அக்.30-ம் தேதி வரையிலான 3 நாட்களில், சென்னையில் இருந்து 11,176 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். தீபாவளிக்கு, பொதுமக்கள் சொந்த ஊர் செல்வதற்காக, மொத்தமாக 14,086 பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். மேலும் இந்த ஆண்டு 1 லட்சத்து 20 ஆயிரம் முன்பதிவுகள் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

### அமைச்சர் ஆலோசனை

தீபாவளியையொட்டி சிறப்பு பேருந்துகள் இயக்குவது குறித்து சென்னையில் தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், நேற்று (அக்.21) ஆலோசனை நடத்தினார். பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: தீபாவளிக்கு, பொது மக்கள் சொந்த ஊர் செல்வதற்காக, 14,086 பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சென்னையில் இருந்து

இதில் சென்னையில் இருந்து மட்டும், 11,176 பேருந்துகள் இயக்கப்படும். அக்.28ம் தேதியன்று, வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் 700 சிறப்பு பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படும். அக்.29-ம் தேதியன்று 2,125 பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படும். அக்.30ம் தேதியன்று வழக்கமான பேருந்துகளுடன், 2,075 பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படும். எனவே, வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் 4,900 சிறப்பு பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படும்.

### நெரிசலை தவிர்க்க....

இந்த ஆண்டு நெரிசலை தவிர்ப்பதற்காக, கிளாம்பாக்கத்தில் இருந்து புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவண்ணாமலை, போளூர், வந்தவாசி, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படும். கோயம்பேட்டில் இருந்து, கிழக்கு கடற்கரை சாலை, காஞ்சிபுரம், வேலூர், பெங்களூரு மற்றும் திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படும். மாதவரம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திர மாநிலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகளும், வழக்கமாக திருச்சி, சேலம் மற்றும் கும்பகோணம், திருவண்ணாமலைக்கு இயக்கப்படும் பேருந்துகளும் இயக்கப்படும்.

### கிளாம்பாக்கத்தில்...

மேலும், நெரிசலை தவிர்ப்பதற்காக, கிளாம்பாக்கத்தில் இருந்து புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் , திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவண்ணாமலை, போளூர், வந்தவாசி, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படும். கோயம்பேட்டில் இருந்து, கிழக்கு கடற்கரை சாலை, காஞ்சிபுரம், வேலூர், பெங்களூரு மற்றும் திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படும்.

### கூடுதல் பேருந்துகள்...

மாதவரத்தில் இருக்கிற புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திர மாநிலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகளும், வழக்கமாக திருச்சி, சேலம் மற்றும் கும்பகோணம், திருவண்ணாமலைக்கு இயக்கப்படும் பேருந்துகளும் இயக்கப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் இருந்ததை விட, இந்தாண்டு கூடுதலான பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### சென்னை திரும்ப....

2021ம் ஆண்டு 9,929 பேருந்துகள் இயக்கப்பட்டது. 2022-ம் ஆண்டு 10,757 பேருந்துகள் இயக்கப்பட்டன. கடந்தாண்டு

(கடைசி பக்கம் பார்க்க)

### அதிகபட்சமாக ரூ.16,800 கிடைக்கும்:

# டாஸ்மாக் ஊழியர்களுக்கு தீபாவளி போனஸ் அறிவிப்பு

சென்னை, அக். 22-

டாஸ்மாக் ஊழியர்களுக்கு தமிழக அரசு போனஸ் அறிவித்துள்ளது. அதன்படி சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 16,800 ரூபாய் வரை போனஸ் கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இந்த ஆண்டுக்கான தீபாவளி பண்டிகை வரும் 31-ம் தேதி (31.10.2024) கொண்டாடப்பட உள்ளது. இதனையொட்டி தீபாவளிக்கு அடுத்த நாளான நவம்பர் 1ஆம் தேதி அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு நவம்பர் 1ஆம் தேதி விடுமுறை எனத் தமிழக அரசு அறிவித்திருந்தது. இதற்கிடையே தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பட்டாசு வெடிக்க நேரக் கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளை விதித்தது.

இது தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், காலை 6 மணி முதல் 7 மணி வரையும், இரவு 7 மணி முதல் 8 மணி வரையும் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும். அதிக ஒலி எழுப்பும் சரவெடி உள்ளிட்ட பட்டாசுகளைத் தவிர்க்க வேண்டும். குறைந்த ஒலியுடன் குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மை கொண்ட பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும். மருத்துவமனைகள், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசு வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும். குடிசைப் பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த அறிவுறுத்தல்களைப் பொதுமக்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே அனைத்து அரசு பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் எனத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்நிலையில் டாஸ்மாக் ஊழியர்களுக்குத் தீபாவளிக்கான போனஸ் வழங்குவதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், டாஸ்மார்க் ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 16,800 ரூபாய் தீபாவளி போனஸ் ஆகக் கிடைக்கும் எனவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20,000க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்குத் தீபாவளி போனஸ் கிடைக்கும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் தேனி, மதுரை உள்ளிட்ட

# 9 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, அக். 22-


தமிழகதத்தில் தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இன்று (அக்., 22) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இன்று (அக்.,22), நாளை (அக்.,23) இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், மதுரை, கரூர் மற்றும் திருச்சி ஆகிய 9 மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.


தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் நாளை (அக்.,23ம் தேதி) ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -73.48 | -72.95 |
| பாயின்ட் 81,151.27 | பாயின்ட் 24,781.10 |



**தங்கம்**
1 சவரன் ₹58,416
1 கிராம் ₹7,302



**வெள்ளி**
1 கிலோ ₹109,000
1 கிராம் ₹109.00

**டாலர்** ₹84.07

**பெட்ரோல்** ₹100.75


**டீசல்** ₹92.34

### பிரிக்ஸ் அமைப்பின் 16-வது

# உச்சிமாநாடு ரஷ்யாவில் இன்று தொடங்குகிறது

**மாஸ்கோ, அக். 22-**

பிரிக்ஸ் அமைப்பின் 16-வது உச்சிமாநாடு ரஷ்யாவில் இன்று தொடங்குகிறது, ரஷ்ய அதிபர் புதின் அழைப்பை ஏற்று பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.



பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகளை உள்ளடக்கிய கூட்டமைப்பு `பிரிக்ஸ்' (BRICS) என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கூட்டமைப்பின் மாநாடு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் 2024-ம் ஆண்டுக்கான பிரிக்ஸ் அமைப்பின் 16-வது உச்சிமாநாடு ரஷ்யாவின் தலைமையில் நடைபெற உள்ளது. ரஷ்யாவில் உள்ள காசான் பகுதியில் வரும் 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடிக்கு, ரஷ்ய அதிபர் புதின் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், இந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி, ரஷ்யாவுக்குச் செல்ல உள்ளார். தனது பயணத்தின் போது, பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 16-வது பிரிக்ஸ் உச்சி மாநாடு `உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கான பலதரப்பு வாதத்தை வலுப்படுத்துதல்' என்ற கருப்பொருளுடன் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில், இதுவரை பிரிக்ஸ் அமைப்பு மூலம் செயல்படுத்தப்பட்ட முயற்சிகளின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால ஒத்துழைப்புக்கான சாத்தியங்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்படும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரிக்ஸ் மாநாட்டில் உலகளாவிய சமூகத்தை பாதிக்கும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, நீண்டகாலமாக நடந்து வரும் உக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்ய அதிபர் புதினிடம் பிரதமர் மோடி வலியுறுத்துவார் என தெரிகிறது. முன்னதாக கடந்த 2023-ம் ஆண்டுக்கான 15-வது உச்சி மாநாடு தென்னாப்பிரிக்காவின் தலைநகர் ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

### வெண்ணமலை கோவில் நில பிரச்சனை:

# சீமான் தங்கியுள்ள ஓட்டல் முன்பாக போலீஸ் குவிக்கப்பட்டதால் பரபரப்பு

**கரூர், அக். 22-**

வெண்ணமலை கோவில் நில பிரச்சனை சம்பந்தமாக மக்களை சந்திக்க நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் முடிவு செய்தார். இதற்காக கரூர் சென்ற அவர் ஓட்டல் ஒன்றில் தங்கியுள்ளார். இந்த ஓட்டல் முன் திடீரென போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். மக்களை சீமான் சந்திப்பதை தடுத்து நிறுத்துவதற்காக போலீசார் குவிக்கப்பட்டதாக தெரிகிறது.

இந்த தகவல் அறிந்ததும் சீமான் தங்கியுள்ள ஓட்டல் முன்பு நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் குவியத் தொடங்கினர். சீமானை இவர்கள் சந்திக்க சென்றதையும் போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. இதற்கிடையே வாக்குவாதத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மற்றும் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளை போலீசார் கைது செய்தனர்.

கரூர் மாவட்டம் வெண்ணைமலையில் பால சுப்ரமணிய திருக்கோவிலை சுற்றியுள்ள பல நூறு ஏக்கர் நிலங்கள், கோவிலுக்கு சொந்தமான இடங்கள் எனக்கூறி அதனை மீட்கும் நடவடிக்கைகளில் அறிநிலைத்துறை ஈடுபட்டுள்ளது. இதன் தொடர்பாக வீடுகள் மற்றும் கடைகளுக்கு சீல் வைக்கும் பணியில் கடந்த மாதம் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் வியாபாரிகளை சந்திப்பதற்காக சீமான் கரூர் சென்றார். சீமானை சந்திக்க பொதுமக்களும் கூடியிருந்தனர். நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளும் கூடியிருந்தனர். இந்த நிலையில்தான் போலீசார் குவிக்கப்பட்டிருந்தது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

# விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு

### மத்திய அமைச்சர் மோகன் நாயுடு தகவல்

**புதுடெல்லி, அக். 22-**

விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று மத்திய விமானப் போக்குவரத்துத் துறை மந்திரி மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து உள்நாட்டு நகரங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் பல்வேறு விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவங்கள் கடந்த சில நாட்களாக நடந்து வருகிறது. இ-மெயில்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக வரும் இந்த மிரட்டல்களை தொடர்ந்து அவற்றின் சோதனை நடத்தப்படுகின்றன. அப்போது அவை வெறும் புரளிகளாக இருப்பது அம்பலமாகி வருகிறது.இதைப்போல பல்வேறு விமான நிலையங்களுக்கும் வெடிகுண்டு புரளிகள் கிளப்பி விடப்படுகின்றன.

இந்த மிரட்டல் சம்பவங்கள் நாடு முழுவதும் விமான பயணிகள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி வருகிறது. எனவே இந்த சம்பவங்களை கட்டுப்படுத்த மத்திய அரசும், விசாரணை அமைப்புகளும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதற்காக கடுமையான விதிமுறைகளை அமல்படுத்தவும் திட்டமிடப்பட்டு உள்ளது. ஆனாலும் இந்த மிரட்டல் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 24 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டன. இதில் விஸ்தாரா, இண்டிகோ, ஏர் இந்தியா நிறுவனங்களை சேர்ந்த தலா 6 விமானங்கள் இலக்காகி இருந்தன. மிரட்டலுக்கு உள்ளான விமானங்களில் சோதனை நடத்தப்பட்டதில், அவை அனைத்தும் புரளி என தெரியவந்தது. இதற்கிடையே சென்னையில் இருந்து அந்தமான் செல்ல இருந்த ஸ்பைஸ்ஜெட் விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. அதை சோதனை செய்தபோது அது வெறும் புரளி என தெரியவந்தது.

இவ்வாறு 24 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதன் மூலம் இதுவரை மிரட்டலுக்கு உள்ளான விமானங்களின் எண்ணிக்கை 90-ஐ கடந்து உள்ளது. இதைத்தொடர்ந்து சிவில் விமான பாதுகாப்பு அமைப்பு அதிகாரிகள் பல்வேறு விமான நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில் விமான போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் அச்சுறுத்தல் புரளிகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று மத்திய விமானப் போக்குவரத்துத் துறை மந்திரி மோகன் நாயுடு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கடந்த சில நாட்களாக விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து நடக்கிறது. மிரட்டல் அழைப்புகளை உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறோம். உளவுத்துறை மற்றும் புலனாய்வுத்துறை மூலம் மிரட்டல் விடுக்கும் நபர்களை கண்டு பிடித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படும்" என்று அவர் உறுதி அளித்தார்.

# ரஷ்யா மற்றும் வடகொரியா கூட்டணியால் அச்சுறுத்தல்

### உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி எச்சரிக்கை

**கீவ், அக். 22-**

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2 ஆண்டுகளை கடந்து நீடித்து வருகிறது. தொடக்கத்தில் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷ்யா கைப்பற்றியது. இதன் பின்னர் அவற்றை உக்ரைன் பதிலடி கொடுத்து மீட்டது. எனினும், இரு நாடுகளும் போரை தீவிரப்படுத்தி உள்ளன. போரை முடிவுக்கு கொண்டு வரும் தூதரக மற்றும் அமைதி பேச்சுவார்த்தை எதுவும் பெரிய பலன் தரவில்லை.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு ராணுவ உதவியை வடகொரியா செய்து வருகிறது என தகவல் வெளியானது. ராணுவ வீரர்களையும் அனுப்பி வருகிறது. இது போரை தீவிரப்படுத்தும் முயற்சியாக பார்க்கப்படுகிறது. இதுபற்றி உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறும்போது, ரஷ்யா மற்றும் வடகொரியா இடையே ஏற்பட்டு உள்ள கூட்டணிக்கு உலக தலைவர்கள் வெளிப்படையாக கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

இதற்காக நன்றி தெரிவித்து கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டார். இந்த ஆபத்து தரும் கூட்டணியால் போர் நீளும் என அவர்கள் வெளிப்படையாக பேசி வருகின்றனர். வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்கள் ரஷ்யாவுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இந்த உதவிக்கு பதிலாக, ரஷ்யா அதனை எப்படி திருப்பி செலுத்த போகிறது? என கேட்டுள்ள அவர், ரஷ்யாவுக்கு ராணுவ அதிகாரிகளையும் வடகொரியா அனுப்பி வருவது பற்றிய தகவலை வெளியிட்டார். இந்த தீவிர அச்சுறுத்தல் பற்றி சர்வதேச நட்பு நாடுகள் ஒரு வெளிப்படையான பதிலை தர வேண்டும் என உக்ரைன் அரசு எதிர்பார்க்கிறது என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

இதற்கான சான்றுகளை செயற்கைக்கோள்கள் வழியேயும் மற்றும் ரஷ்யாவில் இருந்து வெளிவரும் வீடியோக்களால் நாம் அனைவரும் காண முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். இதனால், போர் நீடிக்குமே தவிர, உலக அளவில் ஒருவருக்கும் பலன் ஏற்படாது என தெரிவித்ததுடன், போரானது விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

### அமெரிக்க அதிபர் தேர்தல்:

# பிரெஞ்ச் பிரைஸ் தயாரித்து வாக்கு சேகரித்தார் டிரம்ப்..!

**பென்சில்வேனியா, அக். 22-**

அமெரிக்க அதிபர் தேர்தலில் பிரெஞ்ச் பிரைஸ் தயாரித்து வாக்கு சேகரித்தார் குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டொனால்டு டிரம்ப்.

அடுத்த மாதம் அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடக்க உள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பாக முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மீண்டும் களம் காண்கிறார். தேர்தல் பிரசாரத்திற்காக, பென்சில்வேனியா சென்ற டிரம்ப் மக்களின் வாக்குகளை ஈர்ப்பதற்காக பிரெஞ்ச் பிரைஸ் செய்து, அதை நேர்த்தியாக பேக் செய்துள்ளார்.

இது தொடர்பாக தனது 'எக்ஸ்' தளத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ள காணொளியில், மெக் டொனால்ட்ஸ் நிர்வாகியிடம், "எனக்கு வேலை வேண்டும். எனக்கு மெக் டொனால்ட்ஸ் கடையில் வேலை செய்ய வேண்டும் என்பது ஆசை" என்று டிரம்ப் கேட்கிறார். பின்னர் பிரெஞ்ச் பிரைஸ் தயாரித்து, வாடிக்கையாளருக்கு விநியோகம் செய்து வாக்கு சேகரித்தார். அவரைக் காண ஆயிரக் கணக்கானோர் அங்கு திரண்டு வந்திருந்தனர்.

**22-10-2024**




**மேஷம்:-** மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும் நாள். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவரவு உண்டு. தன்னம்பிக்கை கூடும் நாள். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**ரிஷபம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை குறையும். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கவனமாக படித்தால் தடைகளைத் தகர்த் தெரியலாம். உடல் சோர்வு அதிகரிக்கும்.

**மிதுனம்:-** பணவரவு உண்டு. இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு, இன்று பேச்சே மூலதனமாகும். வாகன யோகம் உண்டு. அரசால் ஆதாயம் உண்டு.

**கடகம்:-** கோபத்தைக் குறைத்துக் கொண்டு,, சோம்பல் அகற்றி சுறுசுறுப்புடன் இருப்பது நல்லது. திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும்.

**சிம்மம்:-** தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும் நாள். பிரிந்தவர் கூடி பேரின்பம் காணும் நாள். பெண்களால் லாபம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

**கன்னி:-** அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாக ங்கள் பொங்கும் நாள். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**துலாம்:-** தெய்வீக காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும். தொழிலில் புதிய நல்ல திருப்பங்கள் ஏற்படும். இனிய பயணங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும்.

**விருச்சிகம்:-** பிறருக்குத் தீமை செய்யும் எண்ணத்தை கைவிடுவது நல்லது. பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம். அஜீரணக் கோளாறு ஏற்படலாம். வழக்குகளில் வெற்றி கேள்விக்குறியாகும்.

**தனுசு:-** மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும். அரசால் ஆதாயம் கிட்டும். வாகன, போஜன சுகங்கள் கூடி, அவருக்கு என்ன பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள்.

**மகரம்:-** பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும். விரும்பியது விரும்பியபடி கிடைக்கும்.

**கும்பம்:-** உங்கள் செயல்களில் வெற்றி பெற மிகுந்த பிரயாசைப் பட நேரும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். பயணத்தில் தடைகள் ஏற்படலாம்.

**மீனம்:-** உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். காரியத் தடைகள் ஏற்பட்டு, தூக்கம் குறையும்.

### இது வெறும் ட்ரைலர் தான்...

# ஒரு நாள் மழைக்கே சென்னையில் குளம்போல் தண்ணீர்: பிரேமலதா

**ஆம்பூர், அக். 22-**

ஒரு நாள் பெய்த மழை வெள்ளத்துக்கே சென்னை தாங்கவில்லை. எங்கு பார்த்தாலும் குளம் போல் மழை நீர் தேங்கியது .இது வெறும் ட்ரெய்லர்தான் என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று (அக்21) நடைபெற்ற தேமுதிக முப்பெரும் விழா நிகழ்ச்சியில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா கலந்து கொண்டார். இதையடுத்து திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம் பள்ளிதெரு பகுதியில் நடைபெற்ற உறவினர் இல்ல திருமண நிகழ்ச்சியிலும், ஆம்பூர் அடுத்த சான்றோர்குப்பம் பகுதியில் தேமுதிக கிளைசெயலாளர் சங்கரின் படத்திறப்பு விழா நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொண்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ஒரு நாள் பெய்த மழை வெள்ளத்துக்கு சென்னை தாங்கவில்லை. எங்கு பார்த்தாலும் சாலைகளில் குளம் போல் தேங்கிய மழை நீரால் மக்கள் அவதிப்பட்டனர். இது வெறும் ட்ரெய்லர் மட்டும் தான். மெயின் பிக்சர் டிசம்பர் மாதம் தான். அப்போது பெய்யும் மழைக்கு தமிழக அரசு எந்த அளவுக்கு தயாராக இருக்கப் போகிறது என்பது அப்போது தான் தெரியும்.

ஒரு நாள் மழைக்கே, தமிழக அரசின் சாதனையென்று சொல்லிக் கொண்டு இருக்கும் முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இது சாதனை கிடையாது. அடுத்து வருகின்ற பெரு மழைக்கு தயாராக வேண்டும் என்பதுதான். ஒரு நாள் பெய்த மழைக்கு மீனவர்களின் படகுகளையும், தீபாவளிக்காக பேருந்துகளையும் வாடகைக்கு எடுத்துள்ளனர். படகு மற்றும் பேருந்துகளை வாடகைக்கு எடுக்கக்கூடிய அரசை நான் இப்போது தான் தமிழகத்தில் பார்க்கிறேன்.

தமிழ்த் தாய் வாழ்த்து விவகாரத்துக்கு தூர்தர்ஷன் ஊழியர்கள் தவறு செய்து விட்டதாக மன்னிப்புக் கேட்டுவிட்டனர். இதற்கும் ஆளுநருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதில் ஆளுநரை கொச்சைப்படுத்தி பேசுவது கண்டனத்துக்குரியது. தமிழகத்தின் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு குடியரசு தினத்துக்கும் சுதந்திர தினத்துக்குமான தேதியைக் கூட சரியாகச் சொல்ல முடியவில்லை, அப்படி இருக்கும் பட்சத்தில் இதுபோல தவறுவதும் சகஜம் தான்.

தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் விவகாரத்தில் திமுக அரசு அரசியல் செய்து வருகிறது. சென்னை மட்டுமல்லாமல் தமிழக முழுவதும் கஞ்சா, கள்ளச்சாராயம், வெளிமாநில மது விற்பனை என பல்வேறு பிரச்சினைகள் தமிழகத்தில் நிலவுகிறது. மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது, விவசாயம் இல்லை, நெசவுத்தொழில் முற்றிலும் அழிந்து வருகிறது. இதையெல்லாம் தமிழகத்தில் மாற்ற வேண்டும்.

திமுக தேர்தல் நேரத்தில் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வு ரத்து செய்வோம் என தெரிவித்த உதயநிதி ஸ்டாலின், இதுவரைக்கும் நீட் தேர்வு ரத்துக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்? ஆகையால் இந்த அரசு வெறும் வாய் வார்த்தை அரசியல்தான் செய்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியின் போது தேமுதிக மாவட்டச் செயலாளர் ஹரி கிருஷ்ணன், ஆம்பூர் நகரச் செயலாளர் தேவேந்திரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### வரும் நவம்பர் 1-ம் தேதி முதல் 19 வரை

# ஏர் இந்தியா விமானங்களில் பயணம் செய்ய வேண்டாம்

### காலிஸ்தான் தீவிரவாதி புதிய எச்சரிக்கை

**புதுடெல்லி, அக். 22-**

வரும் நவ. 1-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை ஏர் இந்தியா விமானங்களில் பயணிக்க வேண்டாம் என்று காலிஸ்தான் பிரிவினைவாத தீவிரவாதி குர்பத்வந்த் பன்னுன் நேற்று (திங்கள்கிழமை) புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். சீக்கிய இனப்படுகொலையின் 40-வது ஆண்டு நினைவு ஆண்டை முன்னிட்டு ஏர் இந்தியா விமானங்கள் தாக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் கனடாவில் இரட்டைக்குடியுரிமை வைத்துள்ள சீக்கியர்களுக்கான நீதி (எஸ்எஃப்ஜெ) என்ற அமைப்பின் நிறுவனரான பன்னுன் கடந்த ஆண்டும் இதே நேரத்தில் இப்படியான எச்சரிக்கை விடுத்திருந்தார். முன்னதாக கடந்த சில நாட்களாக இந்தியாவின் பல்வேறு விமான நிறுவனங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்தன. பின்னர் இவை புரளி என்று தெரியவந்தது. இந்தப் பின்னணியில் குர்பத்வந்த் பன்னுனின் இந்த புதிய மிரட்டல் செய்தி வந்துள்ளது.

அதேபோல் மற்றொரு காலிஸ்தான் தீவிரவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொல்லப்பட்டது உட்பட, கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்களை இந்தியா குறிவைத்து தாக்குவதாக அந்நாடு குற்றச்சாட்டு வைத்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள பின்னணியிலும் இந்த புதிய மிரட்டல் வந்துள்ளது.

பன்னுனின் மிரட்டல்கள்: கடந்த ஆண்டு (2023) நவம்பர் மாதத்தில், டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமானநிலையத்துக்கு வேறுபெயரிடப்படும், நவம்பர் 19-ம் தேதி விமான நிலையம் மூடப்படும் என்றும் வீடியோ மூலம் செய்தி வெளியிட்டிருந்தார். அன்றைய தினம் யாரும் ஏர் இந்தியா விமானத்தில் பயணிக்க வேண்டாம் என்று எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

அதேபோல் கடந்தாண்டு டிசம்பர் மாதத்தில் அவரைக் கொல்ல சதி நடப்பதாக செய்தி வெளியான நிலையில், டிசம்பர் 13 அல்லது அதற்கு முன்போ இந்திய நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்போவதாக மிரட்டல் விடுத்திருந்தார். கடந்த 2001-ம் ஆண்டு டிசம்பர் 13-ம் தேதி தான் இந்திய நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தாண்டு குடியரசு தினத்தன்று பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் மற்றும் மாநில காவல் துறைத் தலைவர் கவுரவ் யாதவை கொலை செய்யப் போவதாக மிரட்டல் விடுத்திருந்தார். ஜன.26-ம் தேதி பகவந்த் மானை கொல்ல தீவிரவாதிகள் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

சீக்கியர்களுக்கு தனி இறையாண்மை கொண்ட நாடு வேண்டும் என்று கோரி வரும் எஸ்எஃப்ஜெ என்ற அமைப்பை வழிநடத்தி வரும் பன்னுன், தேசதுரோகம் மற்றும் பிரிவினைவாத குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2020ம் ஆண்டு உள்துறை அமைச்சகத்தால் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டார். அதற்கு ஓராண்டுக்கு முன்பு, தேசவிரோதம் மற்றும் நாசகார செயல்களில் ஈடுபட்டதாக கூறி எஸ்எஃப்ஜெ அமைப்பை இந்தியா தடை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**மரம் மனிதனின் உரம்**

### இங்கிலாந்து மன்னர் சார்லசுக்கு எதிராக

# ஆஸ்திரேலிய பாராளுமன்றத்தில் குரல் எழுப்பிய பெண் எம்.பி..!

**கேன்பெர்ரா, அக். 22-**

இங்கிலாந்து மன்னர் சார்லஸ், ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அந்நாட்டின் பாராளுமன்றத்திற்கு நேற்று சென்று உரையாற்றினார். அவர் பேசி முடித்ததும், செனட் சபையின் பெண் உறுப்பினரான லிடியா தோர்ப், காலனித்துவ ஒழிப்புக்கான கோஷங்களை எழுப்பினார். அவையில் இருந்தவர்களின் கவனம் தன்னை நோக்கி திரும்பும்படி மாற்றினார்.

அவருடைய கூச்சலால் அவையில் இருந்த உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். அவர் ஆவேசத்துடன் மன்னர் சார்லசை நோக்கி, எங்களுடைய நிலம் எங்களுக்கு வேண்டும். அதனை திருப்பி கொடுங்கள். எங்களிடம் இருந்து திருடியவற்றை எங்களிடமே திருப்பி தாருங்கள் என சத்தம் போட்டார்.

இது உங்களுடைய பூமி அல்ல. நீங்கள் என்னுடைய அரசரும் அல்ல என குறிப்பிட்ட அவர், ஆஸ்திரேலியாவின் உள்ளூர்வாசிகளை ஐரோப்பிய குடியேறிகள் இனப்படுகொலை செய்து விட்டனர் என கடுமையாக பேசினார். மன்னர் சார்லசின் முன் அவர் இப்படி பேசியதும் சுற்றியிருந்தவர்கள் ஆச்சரியத்துடன் அவரை பார்த்தனர்.

ஆஸ்திரேலியா, 100 நாடுகளுக்கும் மேலாக இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. அப்போது, ஆயிரக்கணக்கான ஆஸ்திரேலிய பழங்குடியின மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஒட்டு மொத்த சமூகமும் புலம்பெயர்ந்து சென்றனர். 1901-ம் ஆண்டு அந்நாடு சுதந்திரமடைந்தபோதும், ஒருபோதும் முழு அளவில் குடியரசு நாடாக மாறவில்லை. அதன் தலைவராக மன்னர் சார்லஸ் நீடித்து வருகிறார்.

தோர்ப் 2022-ம் ஆண்டு உறுப்பினராக பதவியேற்கும் போது, அப்போது ஆஸ்திரேலியாவின் தலைவராக இருந்த ராணி 2-ம் எலிசபெத்துக்கு எதிராக கடுமையாக பேசினார். காலனி ஆதிக்கத்திற்கான, ராணி 2-ம் எலிசபெத்துக்கு உண்மையாக இருப்பேன் என பதவியேற்றபோது அவர் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

உடனடியாக செனட் அதிகாரி குறுக்கிட்டு, அட்டையில் அச்சிடப்பட்டவற்றை மட்டுமே வாசிக்கவும் என தோர்ப்பை தொடர்ந்து கேட்டு கொண்டார்.

# காவலர்களின் தியாகத்திற்கு வீரவணக்கம் செலுத்துகிறேன்

## வீரவணக்க நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, அக். 22-**

நாட்டின் எல்லையை ராணுவ வீரர்கள் பாதுகாப்பது போல், நமது வீடுகளைப் பாதுகாப்பவர்கள் காவல்துறையினர். அந்த மாவீரர்களையும் அவர்களது தியாகத்தையும் போற்றி காவலர் வீரவணக்க நாளில் வீரவணக்கம் செலுத்துகிறேன்,'' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில், ''நாட்டின் எல்லையை ராணுவ வீரர்கள் பாதுகாப்பது போல், நமது வீடுகளைப் பாதுகாப்பவர்கள் காவல்துறையினர். தங்கள் உயிரையும் துச்சமென நினைத்துக் கடமையாற்றும் போது உயிர்த்தியாகம் செய்தோர் பலர். அந்த மாவீரர்களையும் அவர்களது தியாகத்தையும் போற்றி காவலர் வீரவணக்க நாளில் வீரவணக்கம் செலுத்துகிறேன்.'' என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு, சென்னையில் டிஜிபி வளாகத்தில் அமைந்துள்ள காவலர் நினைவு சின்னத்தில் டிஜிபி சங்கர் ஜிவால், பணியின்போது வீரமரணம் அடைந்த காவலர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் விதமாக மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

### நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை:

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடியாக உயர்வு

**சேலம், அக். 22-**

தமிழக, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப் பட்டது.

மேலும் டெல்டா மாவட்டத்திலும் மழை பெய்து வருவதால் அங்கு தண்ணீர் தேவை குறைந்து உள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு திறந்து விடப்பட்டு வந்த தண்ணீரும் குறைக்கப் பட்டது.

இந்த நிலையில் நேற்று இரவு விடிய விடிய தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப் படுகிறது.

நேற்று முன்தினம் வினாடிக்கு 15 ஆயிரத்து 929 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது நேற்று முன்தினம் காலை 18 ஆயிரத்து 94 கனஅடியாக அதிகரித்து காணப்படுகிறது. இதே போல் காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்வரத்தை விட குறைந்த அளவிலேயே பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப் பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 97.89 அடியாக உயர்ந்தது. அணையில் தற்போது 62.14 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

### நீர்வரத்து 15 ஆயிரம் கனஅடியாக சரிவு:

# ஒகேனக்கல்லில் பரிசல் இயக்க, குளிக்க தடை மேலும் நீட்டிப்பு

**ஒகேனக்கல், அக். 22-**

கர்நாடகம் மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணைகளில் இருந்து உபரி நீர் தமிழக காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

மேலும் கடந்த சில நாட்களாக தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதனால் நேற்று முன்தினம் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. இந்த நிலையில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து வந்தது. இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. மேலும் காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

நீர்வரத்து அதிகரித்து வந்ததால் அருவிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் நேற்று 9-வது மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. இதனால் மெயின் அருவிக்கு செல்லும் பாதை பூட்டப்பட்டு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் காவிரி ஆற்றின் கரையோரம் சுற்றுலா பயணிகள் குளிக்காதவாறு ரோந்து பணியில் ஈடுபட்டு போலீசார் கண்காணித்து வருகிறார்கள்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

### பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும்

# உலகின் நம்பிக்கை ஒளியாக இந்தியா திகழ்கிறது: பிரதமர்

**புதுடில்லி, அக். 22-**

பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும், நம்பிக்கை ஒளியாக இந்தியா உள்ளது, என பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்தார்.

டில்லியில் நடந்த தனியார் 'டிவி' நிகழ்ச்சியில், பிரதமர் மோடி பேசியதாவது: இந்தியா அனைத்து துறைகளிலும் செயல்பட்டு வருகிறது.

இது முன்னெப்போதும் இல்லாத அளவில், சென்று கொண்டிருக்கிறது. பல்வேறு கவலைகளில், மூழ்கியுள்ள உலகிற்கு இந்தியா நம்பிக்கை அளிக்கிறது. நாங்கள் 3வது முறையாக, ஆட்சி அமைத்து, 125 நாட்கள் முடிவடைந்துள்ளது. ரூ.9லட்சம் கோடி மதிப்பிலான கட்டமைப்பு திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன.

**சென்செக்ஸ்**

15 புதிய வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன. சென்செக்ஸ் மற்றும் நிப்டி 125 நாட்களில் 6 முதல் 7 சதவீதம் உயர்ந்துள்ளது. அந்நிய செலவாணி 700 பில்லியனுக்கு மேல் அதிகரித்துள்ளது.

9 விமான நிலையங்கள் கட்டுமானம் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சி, முதலீடு குறித்து உலகம் உற்சாகம் அடைந்துள்ளது. இந்தியாவின் டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பார்த்து உலகம் வியக்கிறது.

**பொருளாதார வளர்ச்சி**

வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்கள், வேலையின்மை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்தியா உலகின் நம்பிக்கை ஒளியாக திகழ்கிறது. உலக அளவில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகமாக இருக்கிறது.

உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் இந்தியா வேகமாக வளர்ந்து வருவது பற்றி மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்தியாவின் பொருளாதாரம் , 1 டிரில்லியன் டாலர் ஜி.டி.பி.,யை எட்ட 63 ஆண்டு ஆனது. ஆனால் 2 டிரில்லியன் டாலரை எட்டுவதற்கு ஏழு ஆண்டுகள் மட்டுமே ஆனது. 2020ம் ஆண்டில் 3 டிரில்லியன் டாலராக அதிகரித்தது. உலகின் 11வது பொருளாதாரமாக இருந்த இந்தியா, பத்தாண்டுகளில் ஐந்தாவது பெரிய பொருளாதாரம் என்ற இடத்துக்கு முன்னேறி உள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு என்பது ஒருநாளும் நடக்காது

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உறுதி

**திண்டுக்கல், அக். 22-**

தி.மு.க.வின் கடைசி தொண்டன் உள்ளவரை, தமிழனையும், தமிழ்நாட்டையும், திராவிடத்தையும் தொட்டுக் கூட பார்க்க முடியாது என நத்தத்தில் நேற்று (அக்.21) நடந்த திருமண விழாவில் தெரிவித்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு என்பது ஒருநாளும் நடக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் முன்னாள் எம்எல்ஏ-வான ஆண்டி அம்பலம் இல்ல திருண விழா நேற்று (அக்.21) நடைபெற்றது. அமைச்சர் இ.பெரியசாமி தலைமை வகித்தார். அமைச்சர் அர.சக்கரபாணி வரவேற்றார். அமைச்சர் மூர்த்தி, எம்எல்ஏ-க்கள் இ.பெ.செந்தில்குமார், காந்திராஜன், திண்டுக்கல் எம்பி-யான சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் விஜயன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். மணமக்களை வாழ்த்தி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியது: ''நான் இங்கு மணமக்களை வாழ்த்த மட்டும் வரவில்லை. துணை முதல்வர் ஆனதற்கு உங்களிடம் வாழ்த்துப் பெறவும் வந்துள்ளேன். இது சுயமரியாதை திருமணம். பெரியார், அண்ணா, கருணாநிதி சொன்னதை நான் சொல்லி வருகிறேன். இவர்கள் மூவரும் பெண்கள் முன்னேற்றத்துக்கு பாடுபட்டனர். இந்த வழியில் நமது முதல்வரும் பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய பாடுபட்டு வருகிறார். இலவச பேருந்து பயணம் மூலம் இதுவரை 530 கோடி முறை பெண்கள் அரசுப் பேருந்தில் பயணித்துள்ளனர்.

மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது நமது திராவிட மாடல் அரசு. பெண்கள் முன்னேற்றத்துக்கு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணா சூட்டிய தமிழ்நாடு என்ற பெயரை ஒருவர் மாற்ற முயற்சித்தார். தமிழக மக்களின் எதிர்ப்பால் மன்னிப்புக் கேட்டார். இப்போது தமிழ்த்தாய் வாழ்த்தில் உள்ள திராவிடத்தை நீக்க வேண்டும் என சிலர் கிளம்பியுள்ளனர். தி.மு.க.வின் கடைசி தொண்டன் உள்ளவரை, தமிழனையும், தமிழ்நாட்டையும், திராவிடத்தையும் தொட்டுக்கூட பார்க்க முடியாது. இந்தி திணிப்பை ஒரு போதும் தமிழ்நாடு ஏற்காது.

மக்களவைத் தேர்தல் செமி ஃபைனல் போன்றது. இதில் 40-க்கு 40 என 100-க்கு 100 வாங்கி வெற்றி பெற்றோம். வரும் சட்டசபை தேர்தல் தான் ஃபைனல். இதில் 200-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற வேண்டும். பெரியாரும் சுயமரியாதையும் போல, அண்ணாவும் தமிழ்நாடும் போல, கருணாநிதியும் தமிழும் போல, ஸ்டாலினும் உழைப்பும் போல மணமக்கள் வாழ வேண்டும். உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு தமிழில் பெயர் வைக்கவேண்டும்'' என்று அவர் பேசினார். இவ்விழாவில் திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வெள்ளி செங்கோல் வழங்கினர்.

### காவலர் வீரவணக்க நாள்:

# காவலர்கள் நினைவு சின்னத்தில் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் மரியாதை

**சென்னை, அக். 22-**

பணியின் போது வீர மரணம் அடைந்த போலீஸாரின் தியாகத்தை போற்றும் வகையில் சென்னை காவலர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து தமிழ்நாடு டிஜிபி சங்கர் ஜிவால் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் மரியாதை செலுத்தினர்.

அக்டோபர் 21ம் நாள் ஆண்டுதோறும் காவலர் வீர வணக்க நாளாக நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

1959ம் ஆண்டு இதே நாளில் (21ம் தேதி) லடாக் பகுதியில் சீன ராணுவத்தினர் மறைந்திருந்து நடத்திய திடீர் தாக்குதலில் 10 மத்திய பாதுகாப்பு படைக்காவலர்கள் உயிரிழந்தனர். இத்தாக்குதலில் வீரமரணம் அடைந்த காவலர்களின் தியாகத்தை நினைவுக்கூரும் வகையில் காவலர் வீரவணக்க நாள் ஆண்டு தோறும் அனுசரிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டில் பணியின் போது மரணம் அடைந்த தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த சிறப்பு உதவி ஆய்வாளர் புஸ்பராஜ், தலைமை காவலர் குமரன், முதல் நிலைக் காவலர் கார்த்திகேயன், முதல் நிலைக் காவலர் விக்னேஷ் மற்றும் காவலர் ஜேசு ஆல்வின் உள்ளிட்ட இந்தியாவில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த துணை ராணுவப் படையினர் மற்றும் காவல்துறையினர் 213 நபர்கள் வீர மரணமடைந்துள்ளனர்.

நேற்று (21.10.2024), கடந்த ஓராண்டில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில் தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) அலுவலகத்தில் அமைந்துள்ள காவலர் நினைவுச் சின்னத்தில் காவல் துறை தலைமை இயக்குநரும் படைத் தலைவருமான சங்கர் ஜிவால், மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி மறைந்த காவலர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்தார்.

அதனைதொடர்ந்து, லெப்டினன்ட் ஜெனரல் கரன்பிர் சிங் பிரார், காவல் துறை தலைமை இயக்குநர்கள், சென்னை காவல் ஆணையர் அருண், ஓய்வுபெற்ற காவல் துறை இயக்குநர்கள், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள், மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

முன்னதாக, இதுதொடர்பாக தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில், ''நாட்டின் எல்லையை ராணுவ வீரர்கள் பாதுகாப்பது போல், நமது வீடுகளைப் பாதுகாப்பவர்கள் காவல்துறையினர். தங்கள் உயிரையும் துச்சமென நினைத்துக் கடமையாற்றும் போது உயிர்த்தியாகம் செய்தோர் பலர். அந்த மாவீரர்களையும் அவர்களது தியாகத்தையும் போற்றி காவலர் வீர வணக்க நாளில் வீரவணக்கம் செலுத்துகிறேன்.'' என்று பதிவிட்டிருந்தார்.

# காஷ்மீரில் உள்ள மக்களை கண்ணியமாக வாழ விடுங்கள்

## பாக்.கிற்கு பரூக் அப்துல்லா வேண்டுகோள்

**ஸ்ரீநகர், அக். 22-**

காஷ்மீரில் உள்ள மக்களை கண்ணியமாக வாழ விடுங்கள் என்று பாகிஸ்தானிற்கு பரூக் அப்துல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் கந்தர்பால் மாவட்டத்தில் கட்டுமானப் பணி நடைபெற்று வந்த இடத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் தொழிலாளர்கள் 6 பேர், ஒரு டாக்டர் ஆகியோர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதலை ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வரும், தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவருமான பரூக் அப்துல்லா கண்டித்துள்ளார். மேலும், பயங்கரவாத தாக்குதல்களை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது., பயங்கரவாத தாக்குதல் பிரச்சனையை பல ஆண்டுகளாக அனுபவித்து வருகிறோம். நான் 30 வருடங்களாக இதுபோன்ற வன்முறையை பார்த்து வருகிறேன். அதை நிறுத்துங்கள் என்று பல முறை சொல்லிவிட்டேன். ஆனால் அவர்களின் சிந்தனை அப்படியேதான் இருக்கிறது. பேச்சுவார்த்தை எப்படி நடத்த முடியும்? நீங்கள் (பாகிஸ்தான்) எங்கள் அப்பாவி மக்களை கொன்றுவிட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறீர்கள்.

முதலில் படுகொலைகளை நிறுத்துங்கள். வாழ்வாதாரத்திற்காக இங்கு வந்து வேலை பார்த்த ஏழை தொழிலாளர்கள் கொல்லப்பட்டது வேதனையான சம்பவம். இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தானின் உத்தரவை நிலைநாட்ட முடியும் என்று பயங்கரவாதிகள் நினைத்தால், அது தவறு.

தயவு செய்து எங்களை கண்ணியத்துடன் வாழ விடுங்கள், வளர்ச்சி அடைய அனுமதியுங்கள். எவ்வளவு காலம்தான் எங்களை கஷ்டப்படுத்துவீர்கள்? நீங்கள் (பாகிஸ்தான்) 1947-ல் பழங்குடியினரை அனுப்பி அப்பாவிகளைக் கொன்று பிரச்சினையை ஆரம்பித்தீர்கள். உங்கள் முயற்சி 75 வருடங்களாக வெற்றி பெறவில்லை என்றால், இப்போது எப்படி வெற்றி பெறுவீர்கள்? என்று தெரிவித்தார்.

# தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. உறுதியோடு தொடர்கிறது

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பேட்டி

**புதுக்கோட்டை, அக் 22**

தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. உறுதியோடு தொடர்கிறது என்று தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் இந்து அறநிலை துறை சார்பாக 3 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை. தமிழ்த்தாய் வாழ்த்து இருக்காது என்பது நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் கருத்தாக இருக்கலாம்.

தமிழ் தாய் வாழ்த்து என்பது தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அத்தனை மக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைவராலும் பாடப்பட்டு வருகிறது.

சீமான் அதில் புதிய சர்ச்சையை கிளப்பி உள்ளார். தமிழ்நாடு, திராவிடம் இதை இரண்டையும் தமிழ் மண்ணில் இருந்து பிரிக்க முடியாத சொற்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் திராவிடம் என்ற பெயரோடு தான் இருக்கிறது.

இங்கு உள்ள கட்சிகள் திராவிடம் சார்ந்த கட்சிகள் தானே தவிர திராவிடம் சாராத கட்சிகள் இல்லை. யாரும் கட்சி ஆரம்பித்தால் கூட திராவிடம் சார்ந்து தான் கட்சியை ஆரம்பிக்கின்றனர். திராவிடம் என்பது தமிழ் மண்ணிலே ஊறிப்போன ஒன்று.

அதை திராவிட கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் முன்னெடுத்துச் செல்லும்.

ஒரு இயக்கத்தை நாங்கள் அழிக்க வேண்டிய அவசியம் கிடையாது. அந்த இயக்கத்தின் தலைமை பலவீனமாக இருந்துவிட்டால் அந்த இயக்கம் தானாகவே அழிந்து விடும்.

இன்று எடப்பாடி பழனிச்சாமியின் தலைமை பலவீனமாக உள்ளது. அதனுடைய எடுத்துக்காட்டு தான் இந்த குழப்பம்.

சீமான் கற்பனையில் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு போகலாம். ஏதாவது குட்டி கலாட்டா செய்ய வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம்.

திருமாவளவனை பொறுத்தவரை திமுக கூட்டணியில் உறுதியோடு இருக்கிறார். தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் மீண்டும் அரசு அமைவதில் அவர் உறுதியோடு இருக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

### முழுவீச்சில் நடைபெறும்

# த.வெ.க. மாநாடு பந்தல் பணிகள்: 2 நாட்களில் நிறைவு பெறுகிறது

**சென்னை, அக். 22-**

வருகிற 27-ந் தேதி விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை என்ற இடத்தில் நடைபெறுவுள்ள த.வெ.க. மாநாட்டுக்கான பந்தல் பணிகள் உள்பட அனைத்து பணிகளும் இன்னும் 2 நாட்களில் நிறைவு பெற இருக்கிறது.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி மாநாடு வருகிற 27-ந் தேதி விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை என்ற இடத்தில் நடைபெறுகிறது. இதையொட்டி 85 ஏக்கர் நிலப்பரப்பில் மாநாடு நடத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மாநாட்டு நடைபெற சில தினங்களே இருப்பதால் மேடை அமைப்பு பணிகள், உணவு கூடங்கள், வாகனம் நிறுத்தும் இடங்கள், குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி கள் போன்ற பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பணிகள் அனைத்தும் இறுதிக்கட்டத்தை அடைந்து உள்ளது.

மாநாடு நடைபெறும் பகுதியில் திடீரென மழை பெய்தால் பாதிப்பு ஏற்படாத வண்ணம் மணல் பரப்பில் ஜல்லி கற்கள் குவியல் குவியலாக கொட்டப்பட்டு நிலப் பரப்பின் உயரம் அதிகரிக்கப் பட்டு உள்ளது. மாநாட்டு பணிகளை கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் மாநாடு திடலில் தங்கி இருந்து பார்வையிட்டு வருகிறார்.

மாநாட்டு திடலுக்கு விஜய் வந்ததும் தொண்டர்களை நோக்கி சிறிது தூரம் நடந்து சென்று உற்சாகப்படுத்துகிறார். இதையொட்டி 800 மீட்டர் நீளத்துக்கு மாநாட்டு மேடையுடன் சிறப்பு பிரமாண்ட நடை மேடை அமைக்கப்பட்டு வருகிறது. மாநாட்டில் 5 லட்சம் பேர் பங்கேற்க இருப்பதால் ஏற்கனவே 4 வாகன நிறுத்தங்கள் அமைக்கப்பட்டிருந்தது. தொண்டர்களின் எண்ணிக்கை அதிகமாவதை தொடர்ந்து கூடுதலாக மாநாடு திடல் அருகே ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. வாகனங்கள் நிறுத்துவதற்கு என மொத்தம் 225 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

வாகனம் நிறுத்தும் இடங்கள் அனைத்திலும் மின் விளக்கு, குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.மாநாடு வளாகத்தை சுற்றிலும் 20 ஆயிரம் மின் விளக்கு வசதிகள் செய்யப் பட்டுள்ளது. மாநாடு பந்தலை சுற்றிலும் ராட்சத பலூன்கள் பறக்க விடப்பட உள்ளன.சுமார் 1000 பேர் அமரும் வகையில் மாநாடு மேடை பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருகிறது. மாநாடு பந்தலில் சுமார் 75 ஆயிரம் இருக்கைகள் போடப்பட இருக்கிறது.

மாநாடு பாதுகாப்பில் போலீசாருடன் இணைந்து துபாயில் இருந்து வந்துள்ள சிறப்பு தனியார் பாதுகாப்பு படையினர் ஈடுபட இருக்கிறார்கள். கடந்த இரண்டு நாட்களாக பாதுகாப்பு காரணங்களுக்காக மாநாடு திடல் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளது. திடலுக்கு வரும் பணியாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் என யார் வந்தாலும் தீவிர சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப் பட்டு வருகின்றனர். மாநாட்டுக்கு விஜய் வருவதற்காக சிறப்பு வழிகள் அமைக்கப் பட்டு அவரது பாதுகாப்புக்கு என்று சிறப்பு தனிக்குழுவை துபாய் பாதுகாப்பு படையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

மாநாடு பணிகள் பற்றி கட்சி தலைவர் விஜய், மாநில பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் நிர்வாகிகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு மாநாடு பணியை வேகப்படுத்தி வருகிறார். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரவு- பகலாக மாநாட்டு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்னும் 2 நாட்களில் மாநாடு பந்தல் பணிகள் உள்பட அனைத்து பணிகளும் நிறைவு பெற இருக்கிறது.


தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# வழக்கு தொடர்பாக கையெழுத்திட சவுக்கு சங்கருக்கு ஐகோர்ட் உத்தரவு

**மதுரை, அக். 22-**

அனைத்து வழக்குகளுக்கும் சேர்த்து சென்னை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் தினமும் ஆஜராகி சவுக்கு சங்கர் கையெழுத்திட வேண்டும் என உயர்நீதி மன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த யூடியூபரான சவுக்கு சங்கர், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ''பெண் காவலர்களுக்கு எதிராக பேசியதாக என் மீது கோவை, சென்னை, திருச்சி, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. அதே போல், கஞ்சா வைத்திருந்ததாக என் மீது தேனியில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன். இந்நிலையில், என்னை குண்டர் சட்டத்தில் கைது செய்தனர். குண்டர் சட்டத்தை நீதி மன்றம் ரத்து செய்தது. பெண் காவலர்களுக்கு எதிராக பேசிய வழக்கு விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இந்த வழக்குகளில் ஜாமீன் வழங்கிய போது சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் நேரில் அஜராகி கையெழுத்து இடவேண்டும் என்று கீழமை நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது. தற்போது நான் சென்னையில் வசித்து வருவதால், ஒவ்வொரு காவல் நிலையத்துக்கும் சென்று கையெழுத்திடுவதில் சிரமம் உள்ளது. எனவே, அனைத்து வழக்குகளுக்கும் சேர்த்து ஒரே காவல் நிலையத்தில் நிபந்தனை கையெழுத்து இடுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும்'' எனக் கூறப்பட்டு இருந்தது. இந்த மனு நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், சவுக்கு சங்கர் மீது 16 வழக்குகள் உள்ளதாகவும், அதில் சில வழக்குகளில், தினமும், வாரமும், மாதமும் கையெழுத்திட வேண்டும் என நிபந்தனைகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து நீதிபதி, ''சவுக்கு சங்கர் மீது உள்ள வழக்குகளில் பெரும்பான்மையான வழக்குகள் குற்றப் பிரிவு போலீஸ் பதிவு செய்த வழக்குகள், எனவே, அனைத்து வழக்குகளிலும் சென்னை குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் ஆஜராகி அந்தந்த வழக்குகளில் உள்ள நிபந்தனைகளை பின்பற்றி அவர் கையெழுத்திட வேண்டும். தொடர்ந்து வழக்கு விசாரணை நடைபெறும் நீதிமன்றங்களில் சரியான முறையில் ஆஜராகி வழக்கு விசாரணையை எதிர்கொள்ள வேண்டும்'' என்று நீதிபதி உத்தரவிட்டார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அருந்ததியினர் இடஒதுக்கீடு பற்றி பேச திருமாவுக்கு தகுதியில்லை. தேர்தலின்போது ஒரு அருந்ததியினருக்கு கூட சீட் கொடுக்காதது ஏன்? அருந்ததியினர் இடஒதுக்கீடு டேட்டா கொடுத்தது பாஜக தான். கடைநிலை பட்டியலின மக்களுக்கு இடஒதுக்கீடு வேண்டாம் என திருமா நினைக்கிறாரா?

- எல்.முருகன்




பொதுப்பயன்பாட்டு நிலங்களை கையகப்படுத்த சிப்காட் நிர்வாகம் துடிப்பது பொதுமக்கள் மீது நடத்தப்படும் ஈவு இரக்கமற்ற கொடிய தாக்குதல். சிப்காட் நிர்வாகம் பயன்படாத நிலங்களை கையகப்படுத்த வேண்டும். வெள்ளானூர், கும்மனூர் கிராமங்களில் நிலம் கையகப்படுத்தும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும்.

- அன்புமணி



பயங்கரவாத தாக்குதல் விஷயத்தில் இந்தியா என்ன நடவடிக்கை எடுக்கும் என்று தெரியவில்லை, அது மத்திய அரசின் கையில் உள்ளது. இது எங்களுக்கு பெரிய பிரச்சனை. பேச்சுவார்த்தை எப்படி நடத்த முடியும்? பாகிஸ்தான் எங்கள் அப்பாவி மக்களை கொன்றுவிட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார்கள். முதலில் படுகொலைகளை நிறுத்துங்கள்.

- பரூக் அப்துல்லா



தீபாவளிப் பண்டிகையையொட்டி விற்பனையை அதிகப்படுத்த இது போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை மக்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியும். மதுவிலக்குதான் முதல் கையெழுத்து என்ற தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதோடு, படிப்படியாக மதுவைக் குறைப்போம் என்ற அரசின் உத்தரவாதமும் தற்போது கேள்விக்குறியாகி உள்ளது.

- சரத்குமார்



மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்களை கலெக்டர் சங்கீதா பெற்றுக் கொண்டார்.

## வடகாடு மலைப்பாதைகளில் அதிகாரிகள் ஆய்வு



**ஒட்டன்சத்திரம், அக். 22-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கோட்டத் திற்குட்பட்ட ஒட்டன்சத்திரம், வடகாடு மலைச்சாலையில் தற் போது பெய்து வரும் மழை உள்ளிட்ட இயற்கை சீற்றங் களால் பாதிக்கப்பட்ட இடங்களை வட்டாட்சியர் பழனிச்சாமி தலைமையி லான வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, வனத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் விஜய குமார், உதவி பொறியாளர் முருகப்பிரகாஷ், சாலை ஆய் வாளர் ஆண்டவன் உள்ளிட் டோர் இருந்தனர்.

## கோணை எட்டியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

செஞ்சி,அக் 22.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்துள்ள கோணை கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ எட்டியம் மன் ஆலயநூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் திங் கள்கிழமை நடைபெற்றது.

சிலை வைத்து வழிபாடு நடைபெற்று வந்த நிலையில் தற் போது கோபுர கலசத்துடன் புதிய கோயில் கட்டப்பட்டுள் ளது. கோயிலில் புதிய விக்கிரகங்களும் அமைய பெற்றுள்ளது. கோயில் கட்டி முடிப்பட்ட நிலையில் ஆலய மஹா கும்பா பிஷேகத்தை முன்னிட்டு 19ஆம் தேதி மங்கள இசையுடன் சிலைகள் கரிகோலம் நடைபெற்றது.20-ம் தேதி கணபதி ஹோமம், வருண ஆராதனம், சங்கல்பம், வாஸ்துசாந்தி, பிர வேசபலி, புற்று மண் எடுத்தல், காப்பு கட்டுதல், கும்பாலங் காரத்தை தொடர்ந்து யாகசாலையில் கடங்கள் எழுந்தருளி யாகசாலை பூஜைகள் தொடங்கியது. 108 மூலிகை பொருட் கள் ஹோமம், வஸ்திராஹுதி, பூர்ணாஹுதி நடைபெற்றது.திங் கள்கிழமை காலை பூர்ணாஹுதி யாத்ராதானம் தொடர்ந்து கடங் கள் புறப்பாடு நடைபெற்று விமான கோபுர கலசத்தில் புனித ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து மூல வர் ஸ்ரீவிநாயகர், ஸ்ரீஎட்டியம்மன், ஸ்ரீஅம்மச்சாரம்மன், ஸ்ரீசப் தகன்னி, ஸ்ரீவீரன் ஆகிய தெய்வங்களுக்கு புனித நீரை ஊற்றி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் ஸ்ரீஎட்டியம்மன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு சிறப்பு மலர் அலங்காரம் செய்விக்கப்பெற்று மஹா தீபாரா தனை நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் செஞ்சி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஆர்.விஜயகுமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பி னர் அரங்க.ஏழுமலை, தொழில் அதிபர் ஆர்.கே.ஜி.ரமேஷ் உள் ளிட்ட கோணை மற்றும் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். விழா ஏற்பாடுகளை ஸ்ரீஎட்டியம்மன் குலதெய்வ வழிபாட்டு வகையராக்கள் மற்றும் கோணை கிராம பொது மக்கள் செய் திருந்தனர்.

### நிலக்கோட்டை தாலுகாவில் நியாய விலை கடைகளை அடைத்து

# கோரிக்கைகளை வலியுறுத்தி டாக்பியா சங்கத்தினர் கால வரையற்ற போராட்டம்



**வத்தலகுண்டு, அக். 22-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் உள்ள தமிழ்நாடு மாநில தொடக்க வேளாண்மை கூட் டுறவு கடன் சங்கத்தின் மூல மாக நடைபெற்று வரும் நிலக்கோட்டை தொகுதி யில் சுமார் 115 நியாய விலைக் கடைகளில் உள்ள டாக்பியா சங்கத்தினர் இன்று 21. 10. 2024 முதல் தொடர் காலவரையற்ற போராட்டத்தை தொடங்கி யுள்ளனர். இந்த போராட் டத்தில் 3 அம்ச கோரிக்கை யான தமிழகத்தி ல் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க, நகர கூட்டுறவு கடன் சங்க விற்பனையாளர் களிடம் அபராத தொகை யாக இரு மடங்கு வசூலிப் பதை பணியாளர்களின் நலன் கருதி தமிழக அரசு இந்த உத்தரவை ரத்து செய்ய செயிடக் கோரியும், கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் கட்டுப்பாடற்ற பொ ருட்களை அதிகமாக இறக்கி விற்பனை செய்ய குறியீடு நிர்ணயம் செய்துள் ளதை உடனடியாக வாபஸ் பெற வலியுறுத்தியும், தமிழ கம் முழுவதும் நியாய விலை கடைகளில் பணியா ளர்களாக பணியாற்றும் சொந்த மாவட்டங்களில் குறைந்தது 10 கிலோமீட்டர் குடியிருப்பு பகுதிக்குள் பணி அமர்த்திட வேண்டுமென் றும், மற்ற மாவட்டங்களில் பணியாற்றுவதால் மாற்றுத் திறனாளிகள்,

பெண்கள் உள்ளிட்ட பல் வேறு தரப்பினர் பல்வேறு வகையில் பாதிக்கப்படு வதை உடனடியாக தமிழக அரசு உரிய உத்தரவு பிறப் பிக்க வேண்டுகோள் விடுத் தும் 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக முதல் வர் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாநில அளவி லான 21. 10.2024 முதல் தொடர் காலவரையை பெற்ற போராட்டம் நடத்து வதென முடிவு செய்து அதன் படி நிலக்கோட்டை தாலுகா வில் உள்ள 100 க்கும் மேற் பட்ட நியாய விலை கடைக ளையும் பூட்டிவிட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஊழியர்கள் ஒன்றாக திரண்டு அணைப் பட்டி தொடக்க வேளா ண்மை கூட்டுறவு அலுவல கம் முன்பு திரண்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட னர். இதன் காரணமாக நிலக் கோட்டை பகுதியில் பரப ரப்பு ஏற்பட்டுள்ளது.

## அரசுப்பள்ளி மாணவர்கள் ஐதராபாத் ஜிக்யாசா அறிவியல் மையத்தில் இரண்டு நாள் பயிற்சி முகாம்



**விருதுநகர், அக். 22-**

விருதுநகர் மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் வேதியி யலில் மிகுந்த ஆர்வம் மற் றும் கல்வியில் சிறந்த 100 மாணவர்கள் மற்றும் 10 ஆசி ரியர்களுக்கு ஹைதராபாத் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகளை இணைக்கும் விதமாக 2 நாட் கள் நடைபெற்ற ஜிக்யாசா உண்டு உறைவிடப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட னர்.

அதன்படி, அறிவியல் மற் றும் தொழிலக ஆய்வு மன்றத் தின் இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனம் நிறு வனம் மற்றும் தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவ னம் உயிரணு மற்றும் மூலக் கூறு உயிரியல் மையம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து 17.10.2024 மற்றும் 18.10.2024 ஆகிய 2 நாட்கள் நடத்திய உண்டு உறைவிடப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட னர். இப்பயிற்சி முகாமில் தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் பிரகாஷ்கு மார் அவர்கள் "தாய் பூமி" மற்றும் பூமியின் இயற்கை செல்வத்தை ஆராய்வதிலும் பாதுகாப்பதிலும் புவி இயற் பியல் மற்றும் புவியியல் ஆய் வுகளின் முக்கியத்துவம் பற் றிய விரிவுரையுடன் நிகழ்வை துவக்கி வைத்தார். எதிர்கால சந்ததியினருக்கான நிலைத்தன்மை மற்றும் வள நிர்வாகத்தை உறுதி செய்வ தில் பூமி அறிவியலின் முக் கிய பங்கை அவரது உரை வலியுறுத்தியது.

இரண்டாம் நாள், அறிவி யல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் இந்திய வேதியி யல் தொழில்நுட்ப நிறுவனத் தின் இயக்குநர் டாக்டர் சீனி வாச ரெட்டி அவர்கள், அன் றாட வாழ்வில் வேதியிய லின் முக்கியத்துவம், ஆராய்ச் சிப் பணிகளின் முக்கியத்து வம் மற்றும் சமூகத்தில் அறி வியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பங்களிப்பு களை வலியுறுத்தும் வகை யில் மாணவர்களிடம் உரை யாற்றினார்.

மாணவர்கள் அங்குள்ள ஆய்வகங்களை பார்வை யிட்டு, விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடி தங்களது கேள்விகள் மற்றும் சந்தேகங் களை கேட்டுத் தெளிவு பெற் றனர்.

இதன் மூலம் எதிர்கால வாய்ப்புகள் குறித்து விஞ்ஞா னிகளிடம் நேரடியாக கேட்டு அறிந்து தெளிவு பெறுவதற் கும், அறிவியல் மனநிலை மற்றும் ஆராய்ச்சி மனப் பாங்கை வளர்ப்பதற்கும் இந்த பயணம் ஒரு வாய்ப் பாக அமைந்தது என மாண வர்கள் தெரிவித்தனர்.

### திருமங்கலத்தில் டூவீலர் மீது லாரி மோதி விபத்து:

# 2 நகராட்சி ஒப்பந்த பெண் தூய்மை பணியாளர்கள் பலி

**திருமங்கலம். அக்.22.**

திருமங்கலம் நகர் விமான நிலைய சாலையில் டூவீலர் மீது லாரி மோதிய விபத்தில் நகராட்சி ஒப்பந்த பெண் தூய்மை பணியாளர் கள் இருவர் சம்பவ இடத்தி லேயே பலியான சம்பவம் குறித்து டவுன் போலீசார் விசாரணை நடத்தி வருகின் றனர்.

மதுரை மாவட்டம் திரு மங்கலம் நகர் முத்தாலம் மன் கோவில் தெரு வசித்து வரும் மதுரை வீரன் மனைவி நாகரத்தினம்(42) கள்ளிக்குடி தாலுகா அகத்தா பட்டி கிராமத்தில் வசித்து வரும் ஜெயக்கொடி மனைவி ஈஸ்வரி(40) ஆகிய இருவரும் திருமங்கலம் நக ராட்சியில் ஒப்பந்த தூய்மை பணியாளர்களாக வேலை பார்த்து வந்தனர். இவர்கள் மதிய உணவு இடைவே ளைக்கு பின்பு திருமங்கலம் விமான நிலைய சாலையில் உள்ள காமராஜபுரம் பகுதி யில் துப்புரவு பணியை மேற்கொள்வதற்காக சாலை யில் நடந்து சென்ற போது அவ்வழியாக சென்ற டூவீ லரை நிறுத்தி தங்கள் இருவ ரையும் காமராஜபுரம் பகுதி யில் இறக்கிவிட கேட்டுள் ளனர். இதையடுத்து டூவீல ரில் வந்த அந்த நபர் இரண்டு பெண்களையும் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு விமான நிலைய சாலையில் சென்றுள்ளார். ஏற்கனவே இந்த சாலையில் மேம்பாலம் பணிகள் நடை பெற்று வருவதால் சாலை குண்டும் குழியுமாக இருந்த நிலையில் டூவீலரை ஓட்டிச் சென்றவர் சாலையில் உள்ள பள்ளத்தில் இறக்கிய போது நிலை தடுமாறி கீழே விழ அந்த சாலையில் பின்னால் வந்த லாரி மோதியதில் இரண்டு பெண்களும் உடல் நசுங்கி சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரி ழந்தனர்.

டூவீலரை ஓட்டி வந்த நபர் லேசான காயங்களு டன் உயிர் தப்பிய நிலை யில் அச்சத்தில் டூவீலரை போட்டு விட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்.விபத்து நடந் ததை அறிந்த லாரி ஓட்டுந ரும் லாரியை நிறுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார். சம்ப வம் கண்ட அக்கம் பக்கத்தி னர் உடனடியாக திருமங்க லம் டவுன் காவல் நிலையத் திற்கு தகவல் அளித்தனர். அதன் பேரில் தகவல் அறிந்து வந்த போலீசார் இறந்த இரண்டு பெண்க ளின் உடலையும் கைப் பற்றி பிரேத பரிசோதனைக் காக திருமங்கலம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்து விட்டு டூவீலரை ஓட்டி வந்த நபர் யார்?லாரி ஓட்டுநர் யார் என தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.நகராட்சி ஒப் பந்த பெண் தூய்மை பணி யாளர்கள் உயிரிழந்த சம்ப வம்தொடர்பாக தகவல றிந்த நகராட்சி துப்புரவு பணியாளர்களும்,நகராட்சி அலுவலர்களும் மருத்துவ மனை வளாகத்தில் கதறி அழுத சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத் தியது. ரயில்வே மேம்பால பணிகள் நடைபெற்று வரு வதால் திருமங்கலம் விமான நிலைய சாலையில் ஏற்கனவே சமீபத்தில் பெய்த மழையால் சாலை சேறும் சகதியுமாக இருந்த தால் அதனை சீரமைக்க வேண்டும் என பகுதி மக் கள் தொடர்ந்து கோரிக்கை வைத்த நிலையில் சம்பந்தப் பட்ட மேம்பால ஒப்பந்ததா ரர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைய டுத்து மோசமான சாலை யால் டூவீலரில் உதவி கேட்டு ஏறிச் சென்ற நக ராட்சி ஒப்பந்த பெண் தூய்மை பணியாளர்கள் விபத்தில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## பொது அறிவிப்பு

**நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், சர்க்கார் நாட்டாமங்கலம் கிராமத்தில் சர்வே எண்.2/1B(P), 1C(P), 17/1(P), 3(P) and 18/2(P), பட்டா நிலம் 1.17.0 ஹெக்டேர் பரப்பளவில், தி/ள். R.PRAKASAM ROUGH STONE AND GRAVEL QUARRY, திரு. ஆர்.பிரகாசம், த/பெ. ராமசாமி கவுண்டர், எண்.1/87, மசக்காளிபட்டி கிராமம், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்-636301. என்பவருக்கு, சாதாரணகற்கள் மற்றும் கிராவல் வெட்டி எடுப்பதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் (SEIAA) அனுமதி பெறப்பட்டுள்ளது. அனுமதி எண்.Lr.No.SEIAA-TN/F.No.10451/1(a)/ E.C.No.6408/2024. dated 01.10.2024-யின் படி வழங்கப்பட்டுள்ளது. இச்சுற்றுச்சூழல் ஆணையை http:// environmentclearance.nic.in/seiaa.aspx என்ற இணையதள முகவரியில் காணலாம்.**

## பொது அறிவிப்பு

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளி கிராமம், எட்டிக்குட்டைமேடு, க.எண்.1/10 ல் வசித்து வரும் சித்தன் அவர்களின் மனைவி கோவிந்தம்மாள் அவர்கள் கொடுத்த தகவல்படி கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில், எனது கட்சிக்காரர் கோவிந்தம்மாள் அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளி கிராமம், சர்வே எண்.**12/4A1** உள்ள சொத்தை சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளாளபுரம் கிராமம், பாச்சாளியூரில் வசிக்கும் குப்புசாமி அவர்களின் மகன் போர்மன்னன் அவர்களுக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்த சொத்தை கடந்த **10.07.1996** ம் தேதி மகுடஞ்சாவடி சார்பதிவாளர் ஆவண எண்.**1166/1996** ன் படி எனது கட்சிக்காரர் கோவிந்தம்மாள் என்பவருக்கு கிரய ஆவணத்தின் மூலம் கிரயம் ஆவணம் பெற்று கீழ் கண்ட சொத்தானது எனது கட்சிகாரர் அவர்களால் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பாத்தியப்பட்ட ஆவண எண். **928/2005** ஆவணமாக கிடைக்கப்பெற்று அனுபவித்து வருகிறார். தற்போது மேற்படி சொத்தை ஈடு காட்டி எனது கட்சிகாரர் **VERITAS FINANCE PVT Ltd.,** என்ற நிறுவனத்தில் கடன் கேட்டு மனு செய்த போது மேற்படி நிறுவனத்தால் மேற்படி சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கபட்டது. அப்போது தான் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது கட்சிக்காரர் கோவிந்தம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட மூல ஆவண எண். **1166/1996** மூல ஆவண அசல் காணாமல் போனது தெரிய வந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன ஆவணங்கள் வைத்திருப்பவர்களோ அல்லது மேற்படி சொத்தின் பேரில் யாருக்கேனும் உரிமையோ ஆட்சேபனையோ பின் தொடர்சியோ இருந்தாலோ நாளது தேதி முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும் அதற்கு பின்னிட்டு வரும் எந்த விதமான ஆட்சேபனையும் எனது கட்சிக்காரரை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு: V.S.சிவசூர்யா,M.A.,L.L.B., வழக்கறிஞர்,
அங்காளம்மன் கோவில் தெரு, எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.

---

மாண்பமை வணிக நீதிமன்றம்
(சீனியர் சிவில் நீதிபதி), சேலம்.
**C.O.S.No. 44/2024**

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,
SMEC CUM SARC, Salem,
அதன் சார்பாக முதன்மை மேலாளர்.
...வாதி

/Vs /

ஹோட்டல் ஸ்ரீ ராஜேஸ்வரி
அதன் சார்பாக உரிமையாளர்
திரு. C.முருகன்
...பிரதிவாதி

பொது அறிவிப்பு மூலம் சம்மன்

பிரதிவாதி ஹோட்டல் ஸ்ரீ ராஜேஸ்வரி அதன் சார்பாக நிறுவனர் உரிமையாளர் C.முருகன் என்பவர் வாதி வங்கியில் கடன் வாங்கினார் அப்பொழுது கொடுத்த முகவரி த/பெ.சின்னகுஞ்சன், க.எண்.1, பழனியப்பா வெயிட் பிரிட்ஜ் அருகில், கொண்டலாம்பட்டி ரவுண்டானா, சேலம் - 636 010 இந்த முகவரிக்கு நீதிமன்ற அழைப்பானை அனுப்பப்பட்டது. ஆனால் அந்த அழைப்பானையை சார்வு செய்ய முடியவில்லை அதனால் கனம் கோர்ட்டார் அவர்கள் வணிக நீதிமன்றம் (சீனியர் சிவில் நீதிபதி), சேலம் செய்தி தாள் வெளியீடு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார். **12.11.2024** -ம் தேதி அன்று காலை 10.30 மணிக்கு மேல் குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தின் முன் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகுமாறு இதன் மூலம்அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட அந்த நாள் மற்றும் மணிநேரத்திற்கு முன் உங்கள் தோற்றத்தின் இல்லை யென்றால், நீங்கள் இல்லாத நேரத்தில் வழக்கு கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

/கோர்ட் உத்தரவுப்படி/
K.வேலாயுதம்,M.Sc.,M.L.,
வழக்கறிஞர்,சேலம்.

---

மாண்பமை மாவட்ட இரண்டாவது
கூடுதல் நீதிமன்றம், சேலம்.
**S.O.P.No.73/2024**

திருமதி R.லீலாவதி,
க/பெ.லேட். ராமலிங்கம்,
க.எண்.35/1, ராஜாராம் நகர் 2 வது
குறுக்கு தெரு, அஸ்தம்பட்டி,
சேலம் - 636007.
...மனுதாரர்

இடையே

NIL
...எதிர்மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரர் திருமதி. R.லீலாவதி (வயது 73), க/பெ.லேட்.ராமலிங்கம், கதவு எண்.35/1, ராஜாராம் நகர் 2 வது குறுக்கு தெரு, அஸ்தம்பட்டி, சேலம் - 636 007 ஆகியவர் மேற்படி மனுவை நிர்வாக அனுமதி கடிதம் கோரி அவருடைய மதிப்புள்ள பொருட்கள் சம்மந்தமாக மனு செய்துள்ளார். மேற்படி மனு சம்மந்தமாக எவருக்கோனும ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அது சம்மந்தமாக வருகிற **08.11.2024** அன்று சேலம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மேற்படி நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ காலை 10.30 மணிக்கு வந்து தெரிவிக்கலாம் என்பதை இந்த பொது அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

/கோர்ட் உத்தரவுப்படி/
P.ராஜாராம்,B.Sc.,M.L.,
V.கிருஷ்ணமூர்த்தி,M.A.,B.L.,
வழக்கறிஞர்கள், சேலம்.

---

**வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.அதிமு.6769/2024/டி
நாள்: 18.10.2024**

**ரஹிமான்கான், த/பெ.மஹபூப்கான், கதவு எண்.77, கிருஷ்ணகிரி மெயின் ரோடு, ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 207
......மனுதாரர்**

**உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்**

**அறிவிப்பு**

**மேற்படி மனுதாரராகிய, எனது தாயார் திருமதி.ஆசியாபீ க/பெ. மஹபூப்கான் என்பவர் கடந்த 25.08.2018-ம் தேதி யில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங் கரை வட்டம் மற்றும் அஞ்சல், பெரி யார் நகரில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இற ப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற் படி வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட் சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவ ர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட் சேபனையை தெரிவித்துக் கொள்ள லாம்.**

**//உத்தரவுப்படி//
மனுதாரர்
ரஹிமான்கான், த/பெ.மஹபூப்கான், கதவு எண்.77, கிருஷ்ணகிரி மெயின் ரோடு, ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 207
செல்: 9965695178 : 9994567813**

---

மாண்பமை 3வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம், சேலம்.
**O.S.No.55/2022**

N.சிவக்குமார், த/பெ.நாராயணசாமி,
க.எண்.27, லஷ்மி இல்லம்,
வெங்கடேஷ்வரா நகர் - முதல் தெரு,
கன்னங்குறிச்சி அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 008.
...வாதி

இடையே

S.மேகலா, க/பெ. செல்வராஜ்,
TNESTC, Service Deportment,
மணக்காடு பணிமனை,
கன்னங்குறிச்சி மெயின் ரோடு,
சேலம் மாநகரம் - 636007.
...5 ம் பிரதிவாதி

பொது அறிவிப்பு

மேற்படி தாவாவின் 5ம் பிரதிவாதியாகிய தாங்கள் மேற்படி வழக்கில் வரும் **12.11.2024** ம் தேதியில் சேலம் மாண்பமை 3வது கூடுதல் உரிமையயில் நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ நேரில் தோன்றி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டும் என இப்பொது அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தவறும்பட்சத்தில் உமக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

/கோர்ட் உத்தரவுப்படி/
D.சந்திரன்,B.A.,B.L.,
வழக்கறிஞர், சேலம்.

---

துணை சீட்டுப் பதிவாளர் நடுவர் நீதிமன்றம் சேலம் (மேற்கு)
**ARC NO. 122/2024 IN
I.A. NO. 64/2024**

M/s. D.N.C. சிட்ஸ் (பி) லிட்.,
No.101H, சாரதா காலேஜ் மெயின் ரோடு, நியூபேர்லேண்ட்ஸ், அழகாபுரம்,
சேலம் - 636 016. ... வாதி

- Vs -

C. பரமசிவன், S/o. செல்லப்பன்
NO.3/183, கடகத்தூர்,
தர்மபுரி-636809. ........ பிரதிவாதி

**பிரதிவாதிக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வர வேண்டிய சீட்டு நிலுவைத் தொகைக்காக தங்கள் பெயருக்கு பதிவான தர்மபுரி இணை 2 சப்டி தர்மபுரி வட்டம் கடகத்தூரைச் சேர்ந்த எண். 4346/2014 கிரைய ஆவணத்தில் கண்ட கீழ்வரும் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய கோரி சீட்டு நிதிச் சட்டம் பிரிவு 68-ன்படி தாக்கலான மனு மீதான விசாரணை **24.10.2024** அன்று வாய்தா போடப் பட்டுள்ளது.உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் வாய்தா அன்று காலை 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் உமது பெயரில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறியவும்.

**சொத்து விபரம்**

தர்மபுரி இணை 2 சப்டி தர்மபுரி வட்டம் கடகத்தூர் கிராம பட்டா எண் 268 சர்வே நெ.454/2 நத்தம் ரீ சர்வே நெ.454/13 ச.மீ.198 இதில் ரவி சொத்திற்கு கிழக்கு செல்லப்பன் இதர சொத்திற்கு மேற்கு தெருவிற்கு வடக்கு சின்னக்கண்ணு மகன் கணேசன் மாது இவர்களின் நிலத்திற்கு தெற்கு. இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 17 தென்புறம் 10 அடி தென்வடலடி கிழபுறம் 40 மேற்கு புறம் 34 அடிக்கு கூடிய 449.1/2 சதுரடிக்கு ச.மீ.46.40 அளவிலான மனை நிலமும் சர்வே நெ. 454/2 நத்தம் ரி.சர்வே நெ. 454/14 ச.மீ .110 தீ .2.00 உள்ள மனை நிலம் பூராவும். இதற்கு செக்குபந்தி தெருவிற்கு வடக்கு, செல்வி நிலத்திற்கு கிழக்கு செல்லப்பன் நிலத்திற்கு மேற்கு கணேசன், மாது நிலத்திற்கு தெற்கு. இதன் மத்தியில் உள்ள மேற்படி காலிமனை பூராவும் இதற்கு போக வர மாமூல் வழிநடை வண்டி வாகனாதி போக்குவரத்து பாத்தியங்கள் உள்பட இதற்கு உட்பட்டது. இந்த சொத்து கடகத்தூர் பஞ்சாயத்து தர்மபுரி யூனியனை சேர்ந்தது.

துணைச்சீட்டு பதிவாளர்
சேலம் (மேற்கு)

---

கனம் சிறப்பு சார்பு நீதிபதி நீதிமன்றம் எண்.1 சேலம்.
**M.C.O.P.No.630/2024**

கலைசெல்வன்
N/F Guardian மனைவி கீதா,
செல்லப்பிள்ளை குட்டை,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம் - 636 304.
...மனுதாரர்

இடையே

திலகவதி, க/பெ. சுரேஷ்,
க.எண்.769இ, பொன் நகர்,
சேலம் ரோடு, நாமக்கல் - 637 003,
நாமக்கல் மாவட்டம்.
...1 ம் எதிர்மனுதாரர்

1 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

கடந்த 11.12.2023 ம் தேதி உமக்கு சொந்தமான வாகனத்தினால் ஏற்பட்ட சாலைவிபத்தில் கொடுங்காயம் அடைந்த திரு.கலைசெல்வன் என்பவர் இழப்பீடு கோரி தாக்கல் செய்த மேற்படி மனு மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற **08.11.2024** ம் தேதி அன்று உமது வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. 1 ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் அன்று காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனைகளை மேற்படி நீதிமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் உமக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
P.ராஜசேகர்,M.A.,B.L.,
வழக்கறிஞர், சேலம்.

---

துணை சீட்டுப் பதிவாளர் நடுவர் நீதிமன்றம் சேலம் (மேற்கு)
**ARC NO. 123/2024 IN
I.A. NO. 58/2024**

M/s. D.N.C. சிட்ஸ் (பி) லிட்.,
No.101H, சாரதா காலேஜ் மெயின் ரோடு,
நியூபேர்லேண்ட்ஸ், அழகாபுரம்,
சேலம் - 636 016. ... வாதி

- Vs -

V. வீரமணி, S/O. வீரராஜுலு நாயுடு,
நெம்பர் 1/353/3, ரெட்டியார் தெரு,
கிருஷ்ணாபுரம், தும்மங்குறிச்சி,
நாமக்கல் - 637 003. ........ பிரதிவாதி

**பிரதிவாதிக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வர வேண்டிய சீட்டு நிலுவைத் தொகைக்காக தங்கள் பெயருக்கு பதிவான நாமக்கல் ரிடி, மோகனூர் சப்ரிடி, மேட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த எண் 381/2012 கிரைய ஆவணத்தில் கண்ட கீழ்வரும் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய கோரி சீட்டு நிதிச்சட்டம் பிரிவு 68ன்படி தாக்கலான மனு மீதான விசாரணை **24.10.2024** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் வாய்தா அன்று காலை 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் உமது பெயரில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறியவும்.

**சொத்து விபரம்**

நாமக்கல் ரிடி, மோகனூர் சப்ரிடி, மேட்டுப்பட்டி கிராமம் க.ச.288/1 பு.ஹெ. 0.83.5 க்கு ஏக் 2.06 உள்ள நிலத்தில் கீழ்கண்ட 3 லக்ச சொத்தில் கண்ட க.ச.288/2ஏ2 நெ நிலத்திற்கும் வடக்கு. ஷை க.ச 288/1ல் கன்னியப்ப பிள்ளைக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கும் கிழக்கு மற்றும் தெற்கு கீழ்கண்ட 3 லக்ச சொத்தில் கண்ட க.ச.288/2டி1, 2டி2 நெ. நிலங்களுக்கும் மேற்கு இதன் மத்தியில் பு.ஏ0.27 செண்டுள்ள நிலம் பூராவும்.

2.ஷை கிராமம் க.ச 288/1 நெ.பு.ஹெ 0.83.5க்கு ஏ2.06 உள்ள நிலத்தில் ஷை கிராமம் க.ச.295 நெ.புலத்துக்கும் கிழக்கு க.ச.288/1 ல் கன்னியப்பப் பிள்ளைக்கு பாத்தியப்பட்ட நிலத்துக்கும் தெற்கு கீழ்கண்ட 3 லக்ச சொத்தில் கண்ட க.ச 288/2ஏ1 நெ.நிலத்துக்கும் மேற்கு, இதன் மத்தியில் முக்கோண வடிவமைப்புள்ளதில் பு.ஏ 0.03 செண்டுள்ள நிலம் பூராவும் இதுவும்.

3. ஷை மேட்டுப்பட்டி கிராமம், சர்வே எண்/ பு.ஹெ./ ஏக்.288/2ஏ1, 0.19.0, 0.47; 288/2ஏ2, 0.30.0, 0.74; 288/2ஏ3 0.07.5, 0.19; 288/2பி, 0.03.5, 0.09; 288/2சி1, 0.16.5, 0.41; 288/2சி2, 0.09.5, 0.24; 288/2சி3, 0.17.0, 0.42; 288/2சி4, 0.06.0, 0.15; 288/2டி1, 0.029.5, 0.73, இதில் பு.ஏ. 0.49; 288/2டி2, 0.02.0, 0.05; 288/2டி3, 0.02.0, 0.05; 288/2டி4, 0.04.5, 0.11; 288/2டி5, 0.08.0, 0.20 இதில் பு.ஏ. 0.02 1/2, 288/2டி6, 0.18.5, 0.46 இதில் பு.ஏ 0.25; 288/2டி7, 0.14.5, 0.36 இதில் பு.ஏ 0.19 1/2, 288/2டி8, 0.08.0, 0.20 இதில் பு.ஏ. 0.16; 288/2டி9, 0.07.0, 0.17; 288/2டி10, 0.08.0, 0.20; 288/2ஏ1, 0.03.0, 0.07; 288/2ஏ2, 0.07.0, 0.17; 288/2ஏ3, 0.10.0, 0.25; 288/2ஏ4, 0.05.0, 0.12; 288/2எப்1, 0.14.0, 0.35; 288/2எப்2, 0.04.0, 0.10; 288/2எப்3, 0.07.5, 0.19; 288/2ஜி1, 0.06.0, 0.15; 288/2ஜி2, 0.10.0, 0.25; 288/2ஜி3, 0.04.0, 0.10; 288/2ஜி4, 0.11.0, 0.27; 288/2ஜி5, 0.05.0, 0.12; 288/2ஜி6, 0.07.0, 0.17; 288/2ஜி7, 0.02.5, 0.06 ஆக 3 அயிட்டங்களில் கூடியது மொத்தம் பு.ஏக் 7.08 செண்ட் உள்ள நிலங்களையும் மற்றும் ஷை சர்வே சர்வே எண்களில் உள்ள இதர நிலங்களையும் சேர்த்து நாமக்கல் வட்டாட்சியர் அலுவலக உத்திரவு எண். TK8A456 நாள். 25/4/2011ல் ஒருங்கிணைப்பு (Club) செய்யப்பட்டதின் பிரகாரம் புதிய சர்வே எண். 288 பு.ஹெ 3.90.5 பு.ஏக்.9.64க்கு தீ.ரூ.12.07 இந்த தீர்வை பெற்ற நிலத்தில் ஷை வீதம் பாத்தியப்பட்ட ஏக் 7.08 செண்ட் நிலத்தில் நாங்கள் "ஜெயம் நகர்" என பெயரிட்டு மனைகளாக பிரித்துள்ளதில் நாளது தேதியில் தங்களுக்கு சுத்தக் கிரயமும் சுவாதீனமும் செய்து கொடுக்கும் பிளாட் எண்.145 க்கு சக்குபந்தி அளவு விபரம்:-

பிளாட் எண் 146க்கும் கிழக்கு பிளாட் எண் 144க்கும் மேற்கு 23 அடி கிழமேல் பாதைக்கும் வடக்கு பிளாட் எண். 130க்கும் தெற்கு. இதன் மத்தியில் கிழமேலடி வடபுரம் 30 அடி தென்புரம் 30 அடி தென்வடலடி கிழபுரம் 40 அடி மேல்புரம் 40 அடி ஆக 1200 சதுரடிகள் கொண்ட காலிமனை நிலம் பூராவும் இந்த கிரயத்திற்கு கட்டுப்பட்டது. இதில் கட்டிட வகையறா இல்லை. ஷை சொத்துக்களுக்கு வழக்கம் போல் நடந்து கொள்ளும் மாமூல் வழி போக வர தடநடை பாத்தியங்களும் மற்றும் ஷை சர்வே எண்ணில் வடபுறமாக விடப்பட்டுள்ள 20 அடி அகலமுள்ள கிழமேல் பொது பாதையின் வழியாகவும் ஷை சர்வே எண்ணில் எங்களால் போடப்பட்டுள்ள பாதைகளின் வழியாகவும் ஆட்கள் கால்நடைகள் வண்டி வாகனாதிகள் தடநடை பாத்தியங் களும் பாத்தியம் ஷை சொத்துக்களைச் சேர்ந்த மூலப் பத்திரங்களில், மூல ரிக்கார்டுகளிலும் கண்ட இன்னும் மற்ற சகல பாத்தியங்களும் உரிமைகளும் பூராவும் இதற்கு பாத்தியம்.

துணைச்சீட்டு பதிவாளர்
சேலம் (மேற்கு)

---

துணை சீட்டுப் பதிவாளர் நடுவர் நீதிமன்றம் சேலம் (மேற்கு)
**ARC NO. 123/2024 IN
I.A. NO. 57/2024**

M/s. D.N.C. சிட்ஸ் (பி) லிட்.,
No.101H, சாரதா காலேஜ் மெயின் ரோடு,
நியூபேர்லேண்ட்ஸ், அழகாபுரம்,
சேலம் - 636 016. ... வாதி

- Vs -

V. வீரமணி, S/O. வீரராஜுலு நாயுடு,
நெம்பர் 1/353/3, ரெட்டியார் தெரு,
கிருஷ்ணாபுரம், தும்மங்குறிச்சி,
நாமக்கல் - 637 003. ........ பிரதிவாதி

**பிரதிவாதிக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வர வேண்டிய சீட்டு நிலுவைத் தொகைக்காக தங்கள் பெயருக்கு பதிவான நாமக்கல் ரிடி, மோகனூர் சப்ரிடி, மேட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த எண். 378/2012 கிரைய ஆவணத்தில் கண்ட கீழ்வரும் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய கோரி சீட்டு நிதிச் சட்டம் பிரிவு 68ன் படி தாக்கலான மனு மீதான விசாரணை 24.10.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் வாய்தா அன்று காலை 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் உமது பெயரில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறியவும்.

**சொத்து விபரம்**

நாமக்கல் ரிடி, மோகனூர் சப்ரிடி, மேட்டுப்பட்டி கிராமம் க.ச.288/1 நெ.பு.ஹெ. 0.83.5 க்கு ஏக் 2.06 உள்ள நிலத்தில் கீழ்கண்ட 3 லக்ச சொத்தில் கண்ட க.ச. 288/2ஏ2 நெ. நிலத்திற்கும் வடக்கு. ஷை க.ச. 288/1ல் கன்னியப்ப பிள்ளைக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கும் கிழக்கு மற்றும் தெற்கு கீழ்கண்ட 3 லக்ச சொத்தில் கண்ட க.ச. 288/2டி1, 2டி2 நெ. நிலங்களுக்கும் மேற்கு, இதன் மத்தியில் பு.ஏ 0.27 செண்டுள்ள நிலம் பூராவும்.

2.ஷை கிராமம் க.ச. 288/1 நெ.பு.ஹெ. 0.83.5க்கு ஏ2.06 உள்ள நிலத்தில் ஷை கிராமம் க.ச.295 நெ.புலத்துக்கும் கிழக்கு க.ச.288/1ல் கன்னியப்பப் பிள்ளைக்கு பாத்தியப்பட்ட நிலத்துக்கும் தெற்கு கீழ்கண்ட 3 லக்ச சொத்தில் கண்ட க.ச. 288/2ஏ1 நெ. நிலத்துக்கும் மேற்கு, இதன் மத்தியில் முக்கோண வடிவமைப்புள்ளதில் பு.ஏ 0.03 செண்டுள்ள நிலம் பூராவும் இதுவும்.

3. ஷை மேட்டுப்பட்டி கிராமம், சர்வே எண்/பு.ஹெ./ஏக். 288/2ஏ1, 0.19.0, 0.47; 288/2ஏ2, 0.30.0, 0.74; 288/2ஏ3, 0.07.5, 0.19; 288/2பி, 0.03.5, 0.09; 288/2சி1, 0.16.5, 0.41; 288/2சி2, 0.09.5, 0.24; 288/2சி3, 0.17.0, 0.42; 288/2சி4, 0.06.0, 0.15; 288/2டி1, 0.029.5, 0.73 இதில் பு.ஏ. 0.49; 288/2டி2, 0.02.0, 0.05; 288/2டி3, 0.02.0, 0.05; 288/2டி4, 0.04.5, 0.11; 288/2டி5, 0.08.0, 0.20 இதில் பு.ஏ. 0.02 1/2, 288/2டி6, 0.18.5, 0.46 இதில் பு.ஏ 0.25; 288/2டி7, 0.14.5, 0.36 இதில் பு.ஏ 0.19 1/2, 288/2டி8, 0.08.0, 0.20 இதில் பு.ஏ. 0.16; 288/2டி9, 0.07.0, 0.17; 288/2டி10, 0.08.0, 0.20; 288/2ஏ1, 0.03.0, 0.07; 288/2ஏ2, 0.07.0, 0.17; 288/2ஏ3, 0.10.0, 0.25; 288/2ஏ4, 0.05.0, 0.12; 288/2எப்1, 0.14.0, 0.35; 288/2எப்2, 0.04.0, 0.10; 288/2எப்3, 0.07.5, 0.19; 288/2ஜி1, 0.06.0, 0.15; 288/2ஜி2, 0.10.0, 0.25; 288/2ஜி3, 0.04.0, 0.10; 288/2ஜி4, 0.11.0, 0.27; 288/2ஜி5, 0.05.0, 0.12; 288/2ஜி6, 0.07.0, 0.17; 288/2ஜி7, 0.02.5, 0.06 ஆக 3 அயிட்டங்களில் கூடியது மொத்தம் பு.ஏக் 7.08 செண்ட் உள்ள நிலங்களையும் மற்றும் ஷை சர்வே சர்வே எண்களில் உள்ள இதர நிலங்களையும் சேர்த்து நாமக்கல் வட்டாட்சியர் அலுவலக உத்திரவு எண். TK8A456 நாள் 25/4/2011ல் ஒருங்கிணைப்பு (Club) செய்யப்பட்டதின் பிரகாரம் புதிய சர்வே எண். 288 பு.ஹெ 3.90.5 பு.ஏக்.9.64க்கு தீ.ரூ.12.07 இந்த தீர்வை பெற்ற நிலத்தில் ஷை வீதம் பாத்தியப்பட்ட ஏக் 7.08 செண்ட் நிலத்தில் நாங்கள் "ஜெயம் நகர்" என பெயரிட்டு மனைகளாக பிரித்துள்ளதில் நாளது தேதியில் தங்களுக்கு சுத்தக் கிரயமும் சுவாதீனமும் செய்து கொடுக்கும் பிளாட் எண்130க்கு சக்குபந்தி அளவு விபரம்:-

பிளாட் எண்.129 க்கும் கிழக்கு, பிளாட் எண்131க்கும் மேற்கு, பிளாட் எண்145 க்கும் வடக்கு 23 அடி அகல கிழமேல் பாதைக்கும் தெற்கு. இதன் மத்தியில் கிழமேலடி வடபுரம் 30 அடி தென்புரம் 30 அடி தென்வடலடி கிழபுரம் 40அடி மேல்புரம் 40 அடி ஆக 1200 சதுரடிகள் கொண்ட காலி மனை நிலம் பூராவும் இந்த கிரயத்திற்கு கட்டுப்பட்டது. இதில் கட்டிட வகையறா இல்லை. ஷை சொத்துக்களுக்கு வழக்கம் போல் நடந்து கொள்ளும் மாமூல் வழி போக வர தடநடை பாத்தியங்களும் மற்றும் ஷை சர்வே எண்ணில் வடபுறமாக விடப்பட்டுள்ள 20 அடி அகலமுள்ள கிழமேல் பொது பாதையின் வழியாகவும் ஷை சர்வே எண்ணில் எங்களால் போடப்பட்டுள்ள பாதைகளின் வழியாகவும் ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனாதிகள் தடநடை பாத்தியங்களும் பாத்தியம். ஷை சொத்துக்களைச் சேர்ந்த மூலப் பத்திரங்களில், மூல ரிக்கார்டுகளிலும் கண்ட இன்னும் மற்ற சகல பாத்தியங்களும் உரிமைகளும் பூராவும் இதற்கு பாத்தியம்.

துணைச்சீட்டு பதிவாளர்
சேலம் (மேற்கு)

# காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு காவலர் நினைவு சின்னத்தில் அமைச்சர் மா.மதிவேந்தன் அஞ்சலி



**நாமக்கல்,அக்.22-**

நாமக்கல் ஆயுதப்படை மைதானத்தில் *(21.10.2024)* ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் , கலெக்டர் மருத்துவர் ச.உமா, தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் , நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் , நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.இராஜேஸ் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பணியின்போது இறந்த காவல் ஆளிநர்களுக்கு அஞ்சலி செலுத்தும் காவலர் வீர வணக்க நாளை முன்னிட்டு, கடந்த ஓராண்டில் இந்தியா முழுவதும் பணியின்போது இறந்த காவல் ஆளிநர்களுக்கு காவலர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பணியின்போது உயிரிழந்த காவலர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 21-ம் தேதியன்று, காவலர் வீரவணக்க நாள் *(Police Commemoration Day)* அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி, கடந்த ஓராண்டில் இந்தியா முழுவதும் பணியின்போது வீரமரணம் அடைந்த 213 காவல் துறையினர் மற்றும் துணை ராணுவ படையினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியாக நாமக்கல் ஆயுதப்படை மைதானத்தில் உள்ள காவலர் நினைவு சின்னத்தில் காவலர் வீர வணக்க நாள் அனுசரிக்கப்பட்டது.

தொடர்ந்து, காவலர் வீர வணக்க நாள் உறுதிமொழியான "அக்டோபர் 21ம் நாள், ஆண்டுதோறும் காவலர் வீர வணக்க நாளாக நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

*1959*ம் ஆண்டு, இதே நாளில் லடாக் பகுதியில் *Hot Springs* என்ற இடத்தில். சீன இராணுவத்தினர் ஒளிந்திருந்து மேற்கொண்ட திடீர் தாக்குதலில், *10* மத்திய பாதுகாப்பு படைக் *(CRPF)* காவலர்கள் உயிரிழந்தனர். கடல் மட்டத்திலிருந்து, பதினாறாயிரம் அடி உயரத்தில், அன்று வீர மரணமடைந்த காவலர்களின் தியாகத்தை, இவ்விடத்தில் இருந்து நாம் நினைவு கூர்கிறோம்.

கடற்கரையானாலும் பனிமலைச் சிகரமானாலும், காவலர் பணி, இடர் நிறைந்தது. *Lord Tennyson*-ன் வார்த்தைகளில் சொல்லப் போனால் *Theirs not to reason why Theirs not to make repl Theirs but to do and die* உனது வருங்காலத்திற்கு எனது தற்காலத்தை ஈந்தேன். நாளைய உன் விடியலுக்கு நான் மடியத் தயார் என்று கூறி இவ்வாண்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நம்மை விட்டுப் பிரிந்த காவல் குடும்பத்தினரின் எண்ணிக்கை *213*. மடிந்த இவர்கள் விட்டுச் சென்ற பணிகளைச் செய்து முடிப்போம் என்று உறுதி பூண்டு, அவர்களின் வீரத் தியாகம் வீண்போகாது என்று இந்த காவலர் வீரவணக்க நாளில் உறுதிமொழி ஏற்போம்" என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

# காரிமங்கலம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக அயோடின் பற்றாக்குறை தடுப்பு தின விழிப்புணர்வு

**தர்மபுரி,அக்.22-**

தர்மபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா ,

எம்.பி.,பி.எஸ்., வழிகாட்டல் படி, மாவட்ட உணவு பாதுகாப்பு துறை, மகளிர் கல்லூரி நாட்டு நலப் பணி திட்ட பிரிவு மற்றும் மாவட்ட நுகர்வோர் அமைப்பு சார்பாக உலக அயோடின் பற்றாக்குறை தடுப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரி தமிழ் துறை தலைவர் மற்றும் நாட்டு நலப் பணிகள் திட்ட அலுவலர் செந்தில் குமார் வரவேற்புடன், கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மற்றும் இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் ஜெயசீலன் மற்றும் பென்னாகரம் வட்ட நுகர்வோர் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் தலைவர் சம்பத் ஆகியோர் முன்னிலையில், காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் கே.நந்தகோபால், தலைமையில், காரிமங்கலம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவிகள் பங்கேற்புடன், துறை பேராசிரியர்கள் ஒருங்கிணைப்போடு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

முதல்வர் ஜெயசீலன் தன் உரையில் அயோடின் சத்து, உப்பு பற்றி கல்லூரி மாணவிகள் அவசியம் அறிந்து கொள்வதுடன் தங்கள் வீடு மற்றும் சுற்றுப்புறத்திலும் அயோடின் உப்பு குறித்து இந்நிகழ்வில் சொல்லப்படும் கருத்துக்களை உள்வாங்கி விழிப்புணர்வு செய்ய கேட்டுக் கொண்டார்.

காரிமங்கலம் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் தலைமை உரையில் அயோடின் நூண்ணுட்ட சத்து குறைவினால் மூளை வளர்ச்சி குறைவு, நினைவாற்றல் மங்குதல், மாலைக்கண் நோய், முன் கழுத்து கழலை, கர்ப்பிணி பெண்களுக்கு அடிக்கடி கரு சிதைவு, வளர்சிதை மாற்ற குறைபாடுகள் என 50க்கும் மேற்பட்ட பல்வேறு நோய்களுக்கு அயோடின் சத்து பற்றாக்குறை காரணமாகிறது. எனவே உப்பில் அயோடின் செறி ஊட்டப்பட்டு உபயோகப்படுத்த அரசு பெரும் முயற்சி ஏற்படுத்தி, விழிப்புணர்வும் செய்து வருகிறது. ஆகவே நாம் அனைவரும் அயோடின் கலந்த உப்பினை உபயோகப்படுத்த வேண்டும் என உரைத்ததுடன் , அயோடின் உள்ள உப்பு , அயோடின் இல்லாத உப்பு வேறுபாட்டினை நேரடியாக உப்பு பாக்கெட்டைகளைக் கொண்டு *MBI kit*(ஸ்டார்ச் கரைசல்) உதவியுடன் செயல் விளக்கம் அளித்ததுடன், வீட்டு அளவிலேயே நாம் வாங்கும் உப்பில் அயோடின் உள்ளதா இல்லையா என்பதை உருளைக்கிழங்கு மற்றும் எலுமிச்சை பழ சாறு கொண்டு கண்டறிதல் குறித்து விளக்கம் அளித்தார்.

மனிதனின் ஆயுட்காலத்தில் தேவைப்படும் அயோடின் அளவு வெறும் மூன்று கிராம் மட்டுமே அதற்கு ஏற்ற வகையில் உப்பில் அயோடின் செறிவூட்டப்பட்டு தயாரிக்கப்படுகிறது. நம் உடலில் உப்பின் மூலம் அயோடின் அளவு அதிகரிக்கும் பட்சத்தில் சிறுநீர் வழியாக அதிகப்படியான அயோடின் வெளியேற்றப்படுகிறது என தெளிவு படுத்தினார்

மேலும் உணவு பொருள் பாக்கெட்களில் காண வேண்டிய அம்சங்கள் குறித்தும், உணவுப் பொருட்களை காண்பித்து செயல் விளக்கம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நுகர்வோர் அமைப்பு செயல்பாடு குறித்தும், நுகர்வோர் உரிமைகள் குறித்தும், நுகர்வோர் மன்றங்கள் குறித்து நுகர்வோர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு தலைவர் சம்பத் கருத்துரை வழங்கினார். நிகழ்வில் நுகர்வோர் சங்க செயலாளர் பெரியசாமி, மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜலக்ஷ்மி காரிமங்கலம் சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு .விக்னேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இறுதியாக உலக அயோடின் பற்றாக்குறை தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் நிகழ்வில் பங்கேற்றனர்.




# கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



**கிருஷ்ணகிரி,அக்.22-**

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்;க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கே.எம்.சரயு தலைமையில் *(21.10.2024)* நடைபெற்றது.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, சாலை வசதி, மற்றும் மின் இணைப்;பு, போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து *326* மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்;கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என கலெக்டர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, கலெக்டர் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் *51* நபர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) சுந்தரராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ரமேஷ்குமார் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரையில் கருப்பு பேட்ச் அணிந்து பணி செய்த மருத்துவர்கள்

**கிருஷ்ணகிரி,அக்.22-**

ஊத்தங்கரை அரசு மருத்துவர் மீது பொய்யான பாலியல் குற்றச்சாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் உள்ள மருத்துவர்கள் கருப்பு பேட்ச் அணிந்து பணி செய்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் (பொறுப்பு) மீது பொய்யான குற்றச்சாட்டு மற்றும் பணியிடை மாறுதல் செய்ததை எதிர்ப்பு தெரிவித்து ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து ஒரு நாள் பணி செய்தனர். இதுதொடர்பாக முன்னாள் மாவட்ட இனை இயக்குநர் டாக்டர். தேவராஜ், மூத்த மருத்துவர்கள் பத்மநாதன், முருகேசன், சென்னம்மாள் ஆகியோர் தலைமையில் தனியார் மற்றும் அரசு மருத்துவர்கள் தெரிவித்தது, டாக்டர் மதனின் இரண்டு வருடத்தில் மருத்துவமனை வளர்ச்சிக்காக செய்த சாதனைகளை எடுத்துரைத்து, பொய்யான குற்ற சாட்டை தெறித்த செவிலியர் செயலுக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக நாங்கள் அனைவரும் கருப்பு பேட்ச் அணிந்து ஒரு நாள் முழுவதும் பணி செய்வதாக தெரிவித்தனர், மேலும் இதே நிலை தொடர்ந்தால் அடுத்த கட்டமாக உண்ணாவிரதம் , வேலை நிறுத்தம் போன்ற போராட்டம் நடத்தப்படுவதாக தெரிவித்தனர் பேட்டியின் போது மருத்துவமனை செவிலியர்கள் பற்றாக்குறையினால் வேலை நேரத்தில் சிறிது நேரம் கூடுதலாக வேலை செய்யுங்கள் என்று கூறினால் மருத்துவ அலுவலரின் மேல் பொய்யான குற்றச்சாட்டை தெரிவித்த செவிலியர் மீது கண்டிக்கிறோம் சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் விசாரித்து பொறுப்பு மருத்துவ அலுவலருக்கு நீதி கிடைக்க செய்ய வேண்டும் என வலியுறுத்தினர் இதில் ஏராளமான மருத்துவர்கள் கலந்து கொண்டனர்

# வாக்களித்த வாக்காளப்பெருமக்களுக்கு நன்றி தெரிவித்த சௌமியா அன்புமணி



**தருமபுரி,அக்.22-**

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் தருமபுரி நாடாளுமன்ற தொகுதியில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முனைவர் சௌமியா அன்புமணி பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் கரகதஅள்ளி, எர்ரனஅள்ளி, நல்லூர், பேவுஅள்ளி, கணபதி, பெலமாரனஅள்ளி, பி.செட்டிஅள்ளி, ஜெர்த்தலாவ், பாலக்கோடு பேருந்து நிலையம், பேளாரஅள்ளி ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு நேரடியாக சென்று வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட செயலாளரும், தருமபுரி சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பி.வெங்கடேஷ்வரன், தருமபுரி மாநில துணைத் தலைவர்கள் பாடி செல்வம், பெ.சாந்தமூர்த்தி, மாநில அமைப்பு செயலாளர் ப.சண்முகம், மாநில இளைஞர் சங்க செயலாளர் எம்.முருகசாமி, மாவட்ட தலைவர் மு.செல்வகுமார், தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.அரசாங்கம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பெ.பெரியசாமி, பெ.தேவேந்திரன், மாவட்ட அமைப்பு செயலாளர் ஆ.அன்பழகன், மாவட்ட அமைப்பு தலைவர் கே.இ.கிருஷ்ணன், மாவட்ட தேர்தல் பணிக்குழு வாசுநாயுடு, மாவட்ட கொள்கை விளக்க அணி செயலாளர் சித்துராஜ், முன்னாள் வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் இ.மா. பாலகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் சரவணகுமாரி, மாவட்ட மகளிர் சங்க செயலாளர் தமிழ்செல்வி, மாவட்ட மகளிர் சங்க தலைவர் பெரியம்மாநாகு, இளம் பெண்கள் சங்க மாவட்ட செயலாளர் சாந்தினி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரிதாபானு, நிர்வாகிகள் – கே.ஜி.மாதையன், ராஜா, தா.கோ.சின்னசாமி, எம்.பி.வேடி, இராஜவேல், ஆர்.கே.சின்னசாமி, ம.கோவிந்தசாமி, ரா.கார்த்திகேயன், தமிழரசன், ஊடகப் பேரவை பொறுப்பாளர்கள் சக்தி, பூபால், ஒன்றிய செயலாளர்கள் – கி.துரை, பெ.சரவணன், க.துரை, ர.குமார், சீ.முருகன், மு.சஞ்சீவன், மா.குமரன், மா.சக்திவேல், வை.சிலம்பரசன், ரா.அசோக்குமார், மு.ராஜசேகர், கண்ணன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



சேலம்

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் *(21.10.2024)* நடைபெற்றது. பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் 340 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரை தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 8 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று இரண்டு நபர்களுக்கு தலா ரூ.3,700/- மதிப்பிலான காதொலிக் கருவிகள், ஒரு நபருக்கு ரூ.7,900/- மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலி மற்றும் ஒரு நபருக்கு ரூ.6,640/- மதிப்பிலான மூளை முடக்குவாதத்திற்கான சிறப்பு இருக்கை என மொத்தம் ரூ.21,940/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, தனித் துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ.மயில், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) சின்னுசாமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் இரா. முருகன், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் இரா. மகிழ்நன் உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தருமபுரி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



**தருமபுரி,அக்.22-**

தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கி.சாந்தி, தலைமையில் *(21.10.2024)* நடைபெற்றது. இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுகொண்டு, கலெக்டர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு முக்கியத்துவம் அளித்து, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் சாலை வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல், சிட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ், வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் ஓய்வூதியத் தொகை உள்ளிட்ட இதர உதவித் தொகைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகைகள், உபகரணங்கள் வேண்டியும் மொத்தம் *466* மனுக்கள் வரப்பெற்றன.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான மனுக்களுக்கு உரிய தீர்வினை உடனுக்குடன் வழங்கிட வேண்டுமெனவும், பொதுமக்கள் அளிக்கின்ற கோரிக்கை மனுக்கள் மீது துறை அலுவலர்கள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அதற்கான தீர்வினை விரைந்து காண வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என கலெக்டர் கி.சாந்தி தெரிவித்தார்.

மேலும், இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், தேசிய தன்னார்வ ரத்ததான நாள் *2024*-ஐ முன்னிட்டு, அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரத்த தான முகாம்கள் நடத்திக் கொடுத்த *32* அமைப்பாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை கலெக்டர் கி. சாந்தி, வழங்கினார். இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) கௌரவ்குமார்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, முதன்மை கல்வி அலுவலர் ஜோதிசந்திரா, அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. அமுதவல்லி, தனித்துணை கலெக்டர் (சபாதி) சுப்பிரமணியம், மாவட்ட வழங்கல் அலுவலர் செம்மலை மற்றும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தே.சாந்தி அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க சிறு புகைப்படக்கண்காட்சி



**சேலம்,அக்.22-**

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராம நா யக் கன் பா ளை யம் ஊராட்சி மன்ற திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப் ப டக் கண் காட் சி யினை *(21.10.2024)* பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு மக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில், செய்திமக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கப் புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராமநாயக்கன் பாளையம் ஊராட்சி மன்ற திடலில் சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்பட்ட அரசு நலத் திட்ட உதவிகள், பல்வேறு துறைச்சார்ந்த அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், கலெக்டர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் போன்ற எண்ணற்ற நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# செங்கம் முத்தமிழ் மன்றம் சார்பில் சிந்து வெளி அகழாய்வு நூற்றாண்டு கருத்தரங்கம்



**செங்கம் அக்.22**

செங்கம் முத்தமிழ் மன்றம் சார்பில் சிந்து வெளி அகழ்வாய்வு நூற்றாண்டு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மன்றத் தலைவர் ராமராகவன் தலைமை தாங்கினார்.

ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி மாணிக்கம் மன்ற கௌரவத் தலைவர் முருகமணி முன்னிலை வகித்தனர். முன்னதாக செயலாளர் தமிழ் மதி என்கிற மணிவண்ணன் வரவேற்றும்.

முடிவில் பொருளாளர் பேராசிரியர் தமிழன்பிரபு நன்றி கூறியும் பேசினர்.

விழாவில் சிறப்பு பேச்சாளராக சிந்து சமவெளி பண்பாட்டு விழுமியங்கள் என்ற தலைப்பில் தமிழ்நாடு தொன்மையியல் ஆய்வு நிறுவன செயலாளரும் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் பேராசிரியருமான மோகன் காந்தி பேசினார். விழாவினை வாழ்த்தி திருப்பத்தூர் காணி நிலம் முனுசாமி பேசினார்.

விழாவில் வாசகர் வட்ட துணைத்தலைவர் அரங்கன் மணிமாறன் பொருளாளர் அப்துல்வாஹித் முன்னாள் தலைமை ஆசிரியர்கள் பொன் லோகானந்தம் வெங்கடேசன் ரெட்கிராஸ் பொருளாளர் ஆதவன் திரைப்பட இணை இயக்குனர் செல்ல முருகன் தடவியல் துறை அலுவலர் குமரேசன் நூலகர் தமிழ்ச்செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மரணமடைந்த தினபூமி நாளிதழ் நிறுவனர் மணிமாறன் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்து சமய அறநிலையத்துறை, ஈரோடு இணை ஆணையர் மண்டல திருக்கோயில்கள் சார்பில் திண்டல் சைதன்யா பள்ளி வளாகத்தில் 27 இணைகளுக்கு திருமணம் நடைபெற்றது. இத்திருமண விழாவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சித்தலைவர் நவமணி கந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஊட்டியிலுள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்று வரும் நீலகிரி புத்தக திருவிழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சியில் கு.ஞானசம்பந்தம் பாரதி கலந்து கொண்டு படிப்பே சிறப்பு என்ற தலைப்பில் சிறப்புரையாற்றி, புத்தக அரங்குகளை பார்வையிட்டார்.



ஈரோடு மாநகராட்சியுடன் லக்காபுரம் பேரூராட்சியை இணைக்க கூடாது என கூறி இப்பகுதியை சேர்ந்த விவசாய கூலிகள் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இந்திய பள்ளிகள் விளையாட்டு குழுமம் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்து தேர்வு போட்டியில் வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.டி. கனிஷ்கா தமிழக அணிக்கு தேர்வு செய்யப்பட்டு, சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளார். அவரை பள்ளியின் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர் , முதல்வர் வெ. லதா ஒருங்கிணைப்பாளர் வி. சித்ரா பாராட்டினர்.



வரும் சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்று எடப்பாடியார் தலைமையில், தமிழகத்தில் மீண்டும் அம்மா ஆட்சி மலர வேண்டி, நீலகிரி மாவட்டம், கீழ்குந்தா பேரூராட்சி செயலாளர் தூனேரி எம்.சிவராஜ் தலைமையில், செயற்குழு உறுப்பினர்கள் மேட்டுப்பாளையம் பத்ரகாளியம்மன் கோவிலில் கிடா வெட்டி, சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர்.



நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் தலைகுந்தா பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

## பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான ஆண்கள் கிரிக்கெட் போட்டி



**ஈரோடு. அக் 22-**

பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையே ஆன D- பிரிவு ஆண்கள் கிரிக்கெட் போட்டிகள் 14/10/24 முதல் தொடங்கி 18/10/24 வரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மொடக்குறிச்சி எழுமாத்தூர் சார்பாக இப்போ போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன இந்த போட்டியில் 22 அணிகள் கலந்து கொண்டனர் இப் போட்டிகளை கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ எபநேசர் துவங்கி வைத்தார் போட்டிகள் அனைத்தும் நாக்அவுட் முறையில் நடைபெற்றது இந்த போட்டிகள் அனைத்தும் 18/10/24 அன்று போட்டிகள் நிறைவு பெற்ற நிலையில் முதலாவது இடத்தினை அம்மன் கலை அறிவியல் கல்லூரி பெற்றது. இரண்டாவது இடத்தினை கோபி கலை அறிவியல் கல்லூரி அணியினர் பெற்றனர் மூன்றாவது இடத்தினை ஈரோடு கலை அறிவியல் கல்லூரி பெற்றனர் நான்காவது இடத்தினை ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை அறிவியல் கல்லூரியில் பெற்றனர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முனைவர் எம். தர்மலிங்கம் கணினி துறை உதவி பேராசிரியர் கோப்பைகளையும் பரிசுகளையும் வழங்கினார் மேலும் இப் போட்டிகளை சிறப்பான முறையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உடற்கல்வி இயக்குனர் போ. பாலமுருகன் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தினார்

## ஈரோட்டில் அனுமதியின்றி வீட்டில் விற்பனைக்காக பட்டாசு வைத்திருந்தவர் கைது: ரூ.1 லட்சம் மதிப்பிலான பட்டாசு பறிமுதல்

**ஈரோடு, அக்.22-**

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட முத்தம்பாளையம் பகுதி - 2 ஒரு வீட்டில் அனுமதி இன்றி பட்டாசு விற்பனைக்கு வைத்திருப்பதாக தாலுகா போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் தாலுகா போலீசார் அதே பகுதியில் உள்ள கவுதம் என்பவர் வீட்டில் சோதனை செய்தனர். அப்போது அவரது வீட்டில் அனுமதி இன்றி ரூ.1 லட்சம் மதிப்புடைய மூன்று பெரிய பட்டாசு பெட்டிகள் விற்பனைக்கு வைத்திருப்பது தெரிய வந்தது. இதனை பறிமுதல் செய்த போலீசார் கவுதமிடம் விசாரணை நடத்தினர். கவுதம் பட்டப்படிப்பு படித்து டெக்ஸ்டைலில் கூலி வேலை பார்த்து வந்தது தெரிந்தது. கவுதம் சிவகாசியில் பட்டாசுகளை ஆர்டர் செய்து அதனை தனியார் பஸ் மூலம் வாங்கி வீட்டில் விற்பனைக்கு வைத்திருப்பது தெரிய வந்தது. இதுகுறித்து தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து கவுதமை கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.1 லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

## ஈரோடு மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா கோரிக்கை மனுக்களை பெற்றார்



**ஈரோடு.அக்.22-**

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் காவல்; துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 210 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை கலெக்டர் அவர்;கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்;. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள், மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சக்திவேல், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஊட்டி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 15 பயனாளிகளுக்கு ரூ.6.93 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்

### கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



**ஊட்டி, அக்.22-**

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நேற்று (21.10.2024) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொது மக்களிடமிருந்து 160 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, ரூ.6.93 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

திங்கட்கிழமை அன்று நடைபெறும்; மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள்; உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், அரசின் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் சென்று சேர்க்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், பொதுமக்கள் அடிப்படை வசதிகள் கோரி வழங்கும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் முன்னுரிமை அளித்து, பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் முன்னாள் படை வீரர் நலத்துறையின் மூலம் தொகுப்பு நிதியிலிருந்து 04 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ரூ.1.85 இலட்சம் மதிப்பில் கல்வி மேம்பாட்டிற்கான உதவித்தொகை அனுமதி ஆணைகளையும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து 01 முன்னாள் படைவீரர் மற்றும் அவரது துணைவியாருக்கு கண் கண்ணாடி வாங்க செயற்கை உறுப்பு மானியமாக ரூ.8,000-க்கான அனுமதியாணையினையும் வழங்கினார்; மேலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலத்தின் மூலம் கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 09 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளையும், தாட்கோத்துறையின் மூலம் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தின்கீPழ் நிலம் வாங்குவதற்காக 01 பயனாளிக்கு ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை என மொத்தம் 15 பயனாளிகளுக்கு ரூ.6.93 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கல்பனா, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் சுரேஷ்கண்ணன், தாட்கோ பொது மேலாளர் சக்திவேல், முன்னாள் படைவீரர் நலத்துறை உதவி இயக்குநர் (பொ) இந்திரகுமார் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டி ஆயுதப்படை மைதானத்தில்

## உயிர் நீத்த காவலர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, எஸ்.பி.நிஷா பங்கேற்பு



**ஊட்டி, அக்.22-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி காவலர் பயிற்சி ஆயுதப்படை மைதானத்தில், உயிர் நீத்த காவலர்கள் நினைவிடத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நேற்று (21-10-2024) நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா முன்னிலை வகித்தார்.

வீர தீர செயல்களில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த காவலர்களின் நினைவை போற்றும் வகையில் நாடு முழுவதும் அக்டோபர் 21-ம் நாள் காவலர் வீர வணக்க நாளாக அனுசரிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா ஆகியோர் உயிர் நீத்த காவலர்களுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

மேலும், தமிழ்நாட்டில் பணி காலத்தின்; போது, உயிர் நீத்த 5 காவலர்களுக்கும்;, இந்தியா முழுவதும் பணி காலத்தின்; போது, உயிர் நீத்த 213 காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், 60 குண்டுகள் முழங்க மரியாதை செலுத்தப்பட்டடு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், நகர காவல் துணை கண்காணிப்பாளர் யசோதா, ஊரக காவல் துணை கண்காணிப்பாளர் நமசிவாயம், ஆயுதப்படை பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் சரவணன், மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் பாஸ்கர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் முத்தரசு, காவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு கொங்கு கல்வி நிலையம், ரங்கம்பாளையம் பள்ளி மாணவர்கள் மேஜைப் பந்து போட்டியில் சாதனை



**ஈரோடு அக் 22-**

ஈரோடு கொங்கு கல்வி நிலையம், ரங்கம்பாளையம் பள்ளி மாணவர்கள் மேஜைப் பந்து போட்டியில் சாதனை எஸ் ஜி எம் ஐ தேசிய அளவிலான போட்டிக்கு மாணவர்கள் தேர்வாகினர்.

முதலமைச்சர் கோப்பைக்கான மேஜைப்பந்து போட்டியில் சீ. நிரஞ்சன்சாய் மற்றும் ர. ஹரீஷ் ஆகியோர் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தையும் மற்றும் பெ. தீக்ஷா மற்றும் சு. தாரிணி மாணவிகள் பிரிவில் முதல் இடத்தையும், பெ. தீக்ஷா ஒற்றையர் பிரிவில் முதல் இடத்தையும் பெற்று மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மற்றும் SGFI சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் 17 வயது உட்பட்டோருக்கான ஒற்றையர் பிரிவில் முதல் பரிசும் 14 வயது உட்பட்டோருக்கான ஒற்றையர் பிரிவில் சு. தாரிணி என்ற மாணவி முதல் பரிசும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். இவர்கள் தேசிய அளவிலான குஜராத் மற்றும் தமன் அண்ட் டியூவில் நடைபெறும் போட்டிக்கு தேர்ச்சி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி பள்ளியின் தலைவர் எம்.சின்னச்சாமி, தாளாளர் .கே.செல்வராஜ், பொருளாளர் திரு ஆர்.குணசேகரன், மற்றும் உதவித்தலைவர்கள், இணைச் செயலாளர், இணைப் பொருளாளர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், முதல்வர் டி.நதியா அரவிந்தன் மற்றும் பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

## ஊட்டி மாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற திருமண விழாவில் 5 இணைகளுக்கு சீர்வரிசை பொருட்கள்

### கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி, அக்.22-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் நடைபெற்ற திருமண விழாவில் சென்னை மாவட்டத் திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கான திருமண விழாவில் தலைமையேற்று தொடங்கி வைத்தை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் ஊட்டி அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் நேற்று (21-10-2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்;டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு, 5 இணைகளுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட கலெக்டர் 5 தலா இணைகளுக்கு 4 கிராம் திருமாங்கல்யத்திற்;கான தங்க தாலி ரூ.34,000-மதிப்பிலும், கட்டில், பீரோ, உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் ரூ.60,000-என மொத்தம் 5 இணைகளுக்கு ரூ.4.70 இலட்சம் மதிப்பில் திருமாங்கல்யத்திற்கான தங்க தாலி மற்றும் சீர்வரிசை பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஸ், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் விஜயலட்சுமி (கோவை), ஊட்டி நகரமன்றத்தலைவர் வாணீஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நெல்லைகண்ணன், அறங்காவலர் குழு உறுப்பினர் கண்ணம்மா, செயல் அலுவலர்கள் ஜெகநாதன் (உதகை மாரியம்மன் கோவில்), ராஜேஷ் மணிகண்டன் (குன்னூர் விநாயகர் திருகோயில்) வீரகுமார் (பொக்காபுரம் மாரியம்மன் கோவில்), நகை சரிபார்ப்பு துணை ஆணையர் ஹேமலதா, அனைத்து திருக்கோவில்களின் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உலகக்கோப்பை வில்வித்தை போட்டி:
# 5-வது முறையாக வெள்ளி பதக்கம் வென்றார் தீபிகா குமாரி



**ட்லாக்ஸ்காலா, அக். 22-**

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் 5-வது முறையாக இந்திய வீராங்கனை தீபிகா குமாரி வெள்ளி பதக்கம் வென்றார்.

2024-ம் ஆண்டிற்கான வில்வித்தை உலகக்கோப்பை இறுதிப்போட்டி, மெக்சிகோவின் ட்லாக்ஸ்காலாவில் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டிக்கு சீன வீராங்கனை லி ஜியாமனும், இந்திய வீராங்கனை தீபிகா குமாரியும் முன்னேறினர். இதில் லி ஜியாமனிடம் 0-6 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார் தீபிகா குமாரி. வில்வித்தை உலகக்கோப்பையில், தீபிகா குமாரி வெள்ளிப்பதக்கம் வெல்வது இது ஐந்தாவது முறையாகும். இதற்கு முன் நடைபெற்ற உலகக்கோப்பை இறுதிப்போட்டிகளில் நான்கு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் வென்றுள்ளார்.

## புஜாரா இரட்டை சதம் விளாசல்

நடப்பு ரஞ்சி கோப்பை கிரிக்கெட் சீசனில் இரட்டை சதம் விளாசியுள்ளார் இந்திய வீரர் புஜாரா. இது முதல் தர கிரிக்கெட்டில் அவரது 18-வது இரட்டை சதமாக அமைந்துள்ளது. 36 வயதான புஜாரா, சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் வாய்ப்பினை பெறாத சூழலிலும் தொடர்ந்து உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார். ரஞ்சி கோப்பை 2024-25 கிரிக்கெட் சீசனில் சவுராஷ்டிரா அணிக்காக அவர் விளையாடி வருகிறார். சத்தீஸ்கர் அணிக்கு எதிரான போட்டியில் 383 பந்துகளை எதிர்கொண்டு 234 ரன்களை அவர் எடுத்தார்.

இதன் மூலம் முதல் தர கிரிக்கெட்டில் சில சாதனைகளை படைத்துள்ளார். இது முதல் தர கிரிக்கெட்டில் புஜாராவின் 18-வது சதமாகும். இதன் மூலம் முதல் தர கிரிக்கெட்டில் (ஆல்-டைம்) அதிக இரட்டை சதம் பதிவு செய்த வீரர்கள் பட்டியலில் நான்காவது இடத்துக்கு புஜாரா முன்னேறியுள்ளார். இந்திய அளவில் இந்த பார்மெட்டில் அதிக சதம் மற்றும் 21,000+ ரன்கள் விளாசிய வீரர்கள் பட்டியலில் சச்சின், கவாஸ்கர், திராவிட் ஆகியோருக்கு அடுத்த இடத்தில் புஜாரா (66 சதங்கள்) உள்ளார். இதன் மூலம் சதங்களில் மேற்கு இந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் பிரையன் லாராவை (65) முந்தியுள்ளார்.

## கணிப்பது கடினம்: சாம்சன்

சஞ்சு சாம்சன், ஒரு யூ டியூப் சேனல் ஒன்றிக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் டோனி, விராட் குறித்து சில கேள்விகள் கேட்கப்பட்டது. அந்த கேள்விகளுக்கு சாம்சன் பதில் அளித்து கூறியதாவது, நாங்கள் ஐ.பி.எல் தொடரில் சி.எஸ்.கே அணிக்கு எதிராக விளையாடுவதற்கு திட்டம் தீட்டும் பொழுது மகேந்திர சிங் டோனியின் பெயர் வந்தால், அவரை அப்படியே விட்டு விடுங்கள் அடுத்த வீரர் பற்றி பேசலாம் என்று நகர்ந்து விடுவோம். காரணம் என்ன வென்றால் டோனிக்கு எதிராக திட்டங்கள் தீட்டுவது மிகவும் கடினமானது. இதேபோல் தற்போது கிரிக்கெட் உலகில் மிகச்சிறந்த கவர் டிரைவ் வைத்திருக்கக்கூடிய வீரர் என்றால் அது விராட் கோலிதான்.இவ்வாறு அவர் கூறினார்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், முரசொலி நாளேட்டின் முன்னாள் ஆசிரியரும், எழுத்தாளருமான முரசொலி செல்வத்தின் படத்திறப்பு - புகழ் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.

## குறைந்த பந்துகளில் 300 விக்கெட்டுகள்:
# ரபாடா புதிய சாதனை



**டாக்கா, அக். 22-**

வங்காளதேசத்திற்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தி ரபாடா புதிய சாதனையை படைத்துள்ளார்.

**சுற்றுப்பயணம்...**

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி டாக்காவில் நேற்று தொடங்கியது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற வங்காளதேச அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய வங்காளதேச அணி, தென் ஆப்பிரிக்காவின் அபார பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 40.1 ஓவர்களில் 106 ரன்களுக்குள் ஆல் அவுட் ஆனது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் ககிசோ ரபாடா, வியான் முல்டர், கேசவ் மகராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

**34 ரன் முன்னிலை...**

இதையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்கா முதல் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 140 ரன்கள் அடித்துள்ளது. இதன் மூலம் வங்காளதேசத்தை விட 34 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. கைல் வெர்ரியன்னே 18 ரன்களுடனும், வியான் முல்டர் 17 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். வங்காளதேசம் தரப்பில் அதிகபட்சமாக தைஜூல் இஸ்லாம் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து இன்று 2-வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

**300 விக்கெட்டுகள்...**

முன்னதாக தென் ஆப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளரான ரபாடா இந்த இன்னிங்சில் கைப்பற்றிய 3 விக்கெட்டுகளையும் சேர்த்து டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை 300 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த பந்துகளில் 300 விக்கெட்டுகள் கைப்பற்றிய பந்து வீச்சாளர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

### ரபாடாவின் சாதனை:

1. ரபாடா - 11817 பந்துகள்.
2. வாக்கர் யூனிஸ் - 12602 பந்துகள்.
3. டேல் ஸ்டெயின் - 12605 பந்துகள்.
4. ஆலன் டோனால்டு - 13672 பந்துகள்.

## ஓய்வுபெற்ற ஊழியர்களை மீண்டும் நியமனம் செய்யும் இந்திய ரயில்வே

**புதுடெல்லி, அக். 22-**

ரயில்வே துறையில் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிற நிலையில், அதை ஈடு செய்ய25,000 இடங்களுக்கு ஆட்களை நியமனம் செய்யும் நடவடிக்கையை ரயில்வே வாரியம் முன்னெடுத்துள்ளது. இந்த இடங்களுக்கு, ஏற்கெனவே ரயில்வேயில் வேலை பார்த்து ஓய்வுபெற்ற 65 வயதுக்குட்பட்ட நபர்களையும் மறுநியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ரயில்வேயில் ஓய்வுபெற்ற 65 வயதுக்குட்பட்டவர்கள், சூப்பர்வைசர் முதல் டிராக் மேன் வரையில் பல்வேறு வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

உடல் தகுதி: அவர்களின் கடைசிஐந்து ஆண்டுகால பணி நடத்தைஅலசப்பட்டு, அவர்களின் உடற்தகுதியைப் பொறுத்து வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். 2ஆண்டுகள் வரையில் அந்த வேலையில் தற்காலிக ஊழியர்களாக பணியாற்ற முடியும். அவர்களின் செயல்பாடுகளைப் பொறுத்து பணி நீட்டிப்பு வழங்கப்படும்.

மறுநியமனம் செய்யப்படுபவர்களுக்கு, அடிப்படை பென்சன்தொகை மட்டும் கழிக்கப்பட்டு அவர்கள் இறுதியாக பெற்ற மாதம் ஊதியம் வழங்கப்படும். பயணப்படி வழங்கப்படும். ஆனால், ஊதிய உயர்வு வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற ஊழியர்களை மறுநியமனம் செய்யும் செயல்பாடுகளை மண்டல மேலாளர்கள் மேற்கொள்வர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் பற்றாக்குறை: சமீபமாக ரயில்வே விபத்துகள் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றன. ஊழியர்கள் பற்றாக்குறையும் இந்த விபத்துகள் நடைபெறுவதற்கான காரனங்களில் ஒன்று என்று கூறப்பட்டு வருகிற நிலையில், ரயில்வே துறை, அனைத்து மண்டலங்களிலும் தேவையான இடங்களுக்கு ஆட்களை நியமனம் செய்யும் முன்னெடுப்பை தொடங்கியுள்ளது. இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி திணறிவரும் நிலையில், ஓய்வு பெற்றவர்களை மீண்டும் மறுநியமனம் செய்வது மோசமான முன்னெடுப்பு என்று பல்வேறுதரப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## வயநாடு மக்களவை தொகுதி இடைத்தேர்தல்:
# நாளை வேட்பு மனு தாக்கல் செய்கிறார் பிரியங்கா காந்தி

**வயநாடு, அக். 22-**

வயநாடு மக்களவை தொகுதிக்கு வரும் நவம்பர் 13 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பிரியங்கா காந்தி நாளை வேட்பு மனு தாக்கல் செய்கிறார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி லோக்சபா தேர்தலில் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். ரேபரேலி மற்றும் வயநாடு ஆகிய இரண்டு தொகுதிகளில் ராகுல் காந்தி போட்டியிட்ட நிலையில் இரண்டிலுமே வெற்றி பெற்றார். இதனால், வயநாடு தொகுதி எம்பி பதவியை ராகுல் காந்தி ராஜினாமா செய்தார்.

இதையடுத்து, அந்த தொகுதி காலியாக இருந்தது. இந்த நிலையில், வயநாடு தொகுதிக்கு வரும் நவம்பர் 13 ஆம் தேதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதில் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என்று அக்கட்சி தேர்தலுக்கு முன்பே அறிவித்துவிட்டது.பாஜக சார்பில் நவ்யா ஹரிதாஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சத்யன் மொகேரியும் போட்டியிடுகிறார்

3 பிரதான கட்சிகளுமே வேட்பாளரை அறிவித்து விட்டதால், அந்த கட்சிகளின் தொண்டர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். இதனிடையே, நாளை ( புதன்கிழமை) பிரியங்கா காந்தி வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார். ராகுல் காந்தி மற்றும் சோனியா காந்தியும் பிரியங்காவுடன் வயநாடு வருகை தர உள்ளனர். இதனால் பிரியங்கா காந்திக்கு ஆதரவாக இருவரும் பிரசாரம் செய்யலாம் எனத்தெரிகிறது. எனினும், எத்தனை நாட்கள் பிரசாரம் செய்வார்கள் என்ற விவரம் தெரியவில்லை.

# இஸ்ரேலை இந்திய அரசு ஆதரிப்பதற்கான காரணம்
## கேரள முதல்வர் பினராயி விஜயன் விளக்கம்

**திருவனந்தபுரம், அக். 22-**

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்ததாக இஸ்ரேலுடன் மோதலில் ஈடுபட்டுவரும் ஹமாஸ் அமைப்பு கடந்த வருடம் அக்டோபர் 7 ஆம் தேதி முன்னெப்போதும் இல்லாத மிகப்பெரிய தாக்குதலை நடத்தியது. இஸ்ரேலை நோக்கி ஆயிரக்கணக்காக ராக்கெட்டுகள் சரமாரியாக பாய்ந்தன. தரைவழியாக ஊடுருவியும் ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதல்களில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும் சுமார் 250 பேர் பணய கைதிகளாக பிடிப்பித்துச்செல்லப்பட்டனர். இதனைத்தொடர்ந்து பாலஸ்தீன நகரங்களின் மீது இஸ்ரேல் கடந்த ஒரு வருடமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் பெண்கள் குழந்தைகள் உட்பட 41 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

பாலஸ்தீன நகரங்களின் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலுக்கு பல உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இஸ்ரேலின் தாக்குதலை பெயரளவில் கண்டித்தாலும் இந்த விவகாரத்தில் இந்தியா எந்த நாட்டிற்கும் ஆதரவு தெரிவிக்காமல் நடுநிலைமை வகிக்கிறது.

இந்நிலையில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை திருப்திப்படுத்தவே பாலஸ்தீனத்திற்கு பதிலாக இஸ்ரேல் நாட்டை இந்திய அரசு ஆதரித்து வருகிறது என்று கேரளா முதல்வர் பினராயி விஜயன் குற்றம் சாட்டியுள்ளார். கேரள மாநிலம் கண்ணூரில் நடைபெற்ற சி.எச்.கனராம் நினைவேந்தல் பொதுக்கூட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய பினராயி விஜயன் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கூட்டத்தில் பேசிய பினராயி விஜயன், “இஸ்ரேல் மற்றும் நம் நாட்டில் அதிகாரத்தில் இருப்பவர்களும் உடன் பிறந்தவர்கள் போன்றவர்கள். இருவரில் ஒருவரின் பெயர் சியோனிஸ்டுகள் மற்றொருவரின் பெயர் சங் பரிவார். இந்த 2 பேருக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலை நிறுத்த சொல்லி ஐநா சபையில் உள்ள பெரும்பாலான நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. அமெரிக்கா போன்ற சில நாடுகள் மட்டுமே இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளன.

இதில் மகத்தான வரலாற்றை கொண்ட நம் நாடு எங்கே இருக்கிறது? இப்பிரச்சனையில் ஐநா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நாம் நடுநிலைமை வகிக்கிறோம். நாம் பாலஸ்தீனத்தின் பக்கம் இல்லை. பாலஸ்தீனத்தின் மீதான தாக்குதலை நிறுத்தக் கோரும் குழுவில் நாம் இல்லை. அதன் பொருள் நாம் இஸ்ரேல் பக்கம் நிற்கிறோம்.

இத்தாலி போன்ற பல நாடுகள் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்த முடிவு செய்தாலும், இந்தியா இன்னும் அதை நிறுத்தவில்லை. இஸ்ரேலுடன் அதிக ஆயுத வியாபாரம் செய்யும் நாடு இந்தியா தான். இஸ்ரேல் விரும்பும் ஆயுதங்களை தயாரிக்கும் பூமியாக இந்தியா மாறியுள்ளது. பாலஸ்தீனத்தில் நடப்பது போர் அல்ல, இனப்படுகொலை. 2 தரப்பினரிடமும் போதுமான ஆயுதங்கள் இருந்தால் தான் அதை போர் என்று அழைக்க முடியும். இஸ்ரேல் எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்துகிறார்கள், இது ஒருதலைபட்சமான தாக்குதல்” என்று தெரிவித்தார்.

## வரும் நவ. 24, 25-ம் தேதிகளில்
# ஐ.பி.எல். - 2025 மெகா ஏலத்தை சவுதியில் நடத்துகிறது பி.சி.சி.ஐ.

**மும்பை, அக். 22-**

வரும் நவ. 24, 25-ம் தேதிகளில் ஐ.பி.எல். - 2025 மெகா ஏலத்தை சவுதி ரியாத் நகரில் நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**18-வது ஐ.பி.எல்...**

10 அணிகள் பங்கேற்கும் 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2025) மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடக்கிறது. இந்த போட்டிக்கான வீரர்களின் மெகா ஏலம் நவம்பர் கடைசி வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஏலத்துக்கு முன்பாக ஒவ்வொரு அணியும் 6 வீரர்கள் வரை தக்க வைத்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**வரும் 31ம் தேதி...**

மேலும் அணியில் தக்க வைத்துக்கொள்ளும் வீரர்கள் விவரங்களை அறிவிக்க வரும் 31ம் தேதி கடைசி நாளாகும். இதனால் ஒவ்வொரு அணியும் எந்தெந்த வீரர்களை தக்கவைத்துக் கொள்ளும் என்ற பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. மெகா ஏலம் நெருங்கும் நிலையில், அது குறித்து சில முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

**இரண்டு நாட்கள்...**

அதன்படி மெகா ஏலம் வரும் நவம்பர் மாதம் 24 மற்றும் 25 -ம் தேதிகளில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் நவம்பர் 24 மற்றும் 25-ம் தேதிகளில் மெகா ஏலத்தை நடத்துவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. ஆஸ்திரேலிய இந்தியா அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி நவம்பர் 22-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை நடைபெறுகிறது.

**மதியம் தொடங்கி...**

அதே வேளையில் ஐபிஎல் மெகா ஏலத்தை நடத்தினால் ஆஸ்திரேலிய போட்டிகளை யாரும் பார்க்க மாட்டார்கள். ஆனால் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் டெஸ்ட் போட்டி அதிகாலை 5 மணிக்கு தொடங்கி மதியம் 12 அல்லது ஒரு மணிக்கு முடிந்துவிடும். இதனால் ஐபி.எல். மெகா ஏலத்தை மதியம் தொடங்கி இரவு வரை நடத்த பிசிசிஐ திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு
# பெங்களூரு-சென்னை இடையே சிறப்பு ரயில்

**சென்னை, அக். 22-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பெங்களூரு-சென்னை இடையே சிறப்பு ரெயில் இயக்கபட உள்ளது.

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில், சென்னை உள்ளிட்ட வெளியூர்களில் தங்கி இருந்து பணிபுரிந்துவரும் மக்கள், தங்களது சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டு வருகின்றனர். பண்டிகை காலங்களில் நெரிசலை குறைப்பதற்காக சிறப்பு ரெயில்வே சார்பில் சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு ரெயில்களை தெற்கு ரெயில்வே அறிவித்து வருகிறது.

அதன்படி, கே.எஸ்.ஆர். பெங்களூரு - சென்னை எழும்பூர் இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படும் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. பெங்களூரில் இருந்து அக். 30 மற்றும் நவ. 3 ஆகிய தேதிகளில் காலை 8.05 மணிக்கு சிறப்பு ரெயில் சென்னைக்கு இயக்கப்படும் என்றும், மறுவழித்தடத்தில் சென்னை எழும்பூரில் இருந்து அக். 30, நவ. 3 ஆகிய தேதிகளில் மதியம் 3.55 மணிக்கு புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஞ்சி கோப்பை கிரிக்கெட்:
# தமிழகம்-டெல்லி ஆட்டம் டிரா




**புதுடெல்லி, அக். 22-**

ரஞ்சி கோப்பை தொடரில் பாலோ ஆன நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய டெல்லி அணி கடைசி நாள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 193 ரன்கள் அடித்ததால் தமிழகம் - டெல்லி இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**674 ரன்கள் குவிப்பு...**

ரஞ்சி கோப்பை கிரிக்கெட்டில், தமிழ்நாடு - டெல்லி இடையிலான ஆட்டம் (டி பிரிவு) டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இதில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 674 ரன்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது. சாய் சுதர்சன் இரட்டை சதம் நொறுக்கினார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய டெல்லி அணி 2-வது நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 43 ரன்கள் எடுத்திருந்தது.

**264 ரன்கள் சேர்ப்பு...**

3-வது நாளில் தொடர்ந்து ஆடிய டெல்லி அணியில் யாஷ் துல் நிலைத்து நின்று ஆட, இன்னொரு பக்கம் சீரான இடைவெளியில் விக்கெட் விழுந்தது. அந்த அணி 2-வது நாள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 264 ரன்கள் அடித்திருந்தது. யாஷ் துல் 103 ரன்களுடன் களத்தில் இருந்தார். தமிழகம் தரப்பில் குர்ஜப்னீத் சிங், முகமது, வாஷிங்டன் சுந்தர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

**பாலோ ஆன் ஆனது...**

இதனையடுத்து கடைசி நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த டெல்லி அணி முதல் இன்னிங்சில் மேற்கொண்டு 2 ரன்கள் அடித்த நிலையில் 266 ரன்களில் ஆல் அவுட் ஆகி பாலோ ஆன் ஆனது. அதன்படி 2-வது இன்னிங்சை தொடங்கிய டெல்லி அணி கடைசி நாள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 193 ரன்கள் அடித்தது. இதனால் இந்த ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

## மீண்டும் சர்ச்சையில் சிக்கிய பிரபல யூடியூபர் இர்பான்

**சென்னை, அக். 22-**

தனது மனைவியின் பிரசவத்தின் போது, பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டி வீடியோ வெளியிட்டு பிரபல யூடியூபர் இர்பான் மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

தமிழகத்தில் உள்ள பிரபல யூடியூபர்களில் ஒருவர் இர்பான். இவர் உணவகங்களில் ரிவியூ வீடியோ போட்டு பிரபலம் ஆனவர். வெவ்வெறு அரசியல் கட்சி பிரபலங்களுடனும் தொடர்பில் இருப்பவர். இவர், தனது மனைவியின் வயிற்றில் இருந்த கருவின் பாலினம் குறித்து வெளிநாட்டில் பரிசோதித்து அறிவித்த வீடியோ, சில மாதம் முன் சர்ச்சையை ஏற்படுத்தியது. குழந்தையின் பாலினத்தை வெளியிடுவது இந்தியாவில் சட்டப்படி குற்றமாகக் கருதப்படும் சூழலில், அதனை மீறி இர்பான் தனது பாலினத்தை வெளியிட்டார்.

இது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், சுகாதாரத்துறையின் முன் ஆஜராகி விளக்கம் அளித்தார். அப்போது, யூடியூபில் இருந்து சர்ச்சைக்குரிய வீடியோவை நீக்குவதுடன், மன்னிப்பு கேட்டு வீடியோ வெளியிட வேண்டும் என்றும் அரசுத் தரப்பில் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.அப்போதைக்கு தலையை ஆட்டி விட்டு வந்த இர்பான், மன்னிப்பு கோரும் வீடியோ எதுவும் வெளியிடவில்லை. பாலினம் அறிவித்த வீடியோவை மட்டும் நீக்கி விட்டு அமைதியாகி விட்டார். அரசு தரப்பிலும் அதை கண்டுகொள்ளவில்லை.

இந்த விவகாரம் நடந்த சில மாதங்களுக்குள்ளாகவே யூடியூபர் இர்பான் மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். இர்பானின் மனைவிக்கு கடந்த ஜூலை மாதம் குழந்தை பிறந்துள்ளது. பிரசவத்தின் போது, ஆபரேசன் தியேட்டரின் உள்ளே இருந்த இர்பான், குழந்தையின் தொப்புள் கொடியை கத்திரிக்கோலால் துண்டித்தார். இதனை வீடியோவாக எடுத்த அவர், தனது யூடியூப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்த வீடியோ வைரலான நிலையில், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று என தமிழக ஊரக நலப்பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி தெரிவித்துள்ளார். இதனிடையே, சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய வீடியோ நீக்குமாறு யூடியூப் நிறுவனத்திற்கு தமிழக சுகாதாரத்துறை கடிதம் எழுதியுள்ளது.

# நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்ற அதிகாரிகள் முயற்சிப்பதே இல்லை
## ஐகோர்ட் கிளை நீதிபதிகள் அதிருப்தி

**மதுரை, அக். 22-**

மதுரையை சேர்ந்த ரமேஷ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “உயர் நீதிமன்றங்களில் பொதுநல வழக்குகள் அடிப்படை வசதிகள், ஆக்கிரமிப்பு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. அரசு பல்வேறு திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தினாலும், திட்டங்கள் மக்களை சென்றடைய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வதில்லை. இது குறித்து நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகிறது.

இந்த வழக்குகளில் விசாரணை செய்து நீதிமன்றம் உரிய உத்தரவு பிறப்பித்தும் அதிகாரிகள் அதனை நிறைவேற்றுவதில்லை. இதன்காரணமாக, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அதிகாரிகள் மீது தொடரப்படுகிறது. அதன் பிறகும் எந்தப் பணிகளும் மேற்கொள்வதில்லை. இதனால் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

நீதிமன்ற உத்தரவுகளை அரசு அதிகாரிகள் மதிக்காமல் இருப்பதால் நீதிமன்ற சுமையை அதிகப்படுத்தப்படுகிறது. நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் எந்த நடவடிக்கையும் எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, நீதிமன்ற உத்தரவுகளை செயல்படுத்த உத்தரவிட வேண்டும்' எனக் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதிகள் சுப்ரமணியன், விக்டோரியா கவுரி அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், “நீதிமன்ற உத்தரவுகளை அதிகாரிகள் நிறைவேற்ற மாட்டார்கள். உத்தரவுகளை நிறைவேற்ற துளி கூட முயற்சி செய்வதில்லை. இதில் எதுவும் செய்ய முடியாத நிலை உள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றக்கூடாது என்பதை அரசும் அதிகாரிகளும் கொள்கையாகவே வைத்துள்ளனர்.

இதனை தலையெழுத்து என எடுத்துக்கொள்ள வேண்டியது தான். இது நீதிமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை கெடுக்கும் வகையிலும் நீதிமன்றத்தை நம்ப முடியாத சூழலையும் உருவாக்கி வருகிறது” என்று அதிருப்தி தெரிவித்ததுடன், மனு குறித்து மத்திய உள்துறை அமைச்சகம், மற்றும் தமிழக தலைமைச் செயலாளர், தமிழக உள்துறைச் செயலாளர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.



சென்னை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில், 31 புதுமண ஜோடிகளுக்கு திருமணத்தை நேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை, முதல்வர் மு.க.ஸ்டாலின் மணமக்களுக்கு வழங்கி வாழ்த்தினார். அப்போது மணமக்கள் முதல்வருடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். அருகில் அமைச்சர்கள் க.பொன்முடி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், முதன்மைச்செயலாளர் பி.சந்திரமோகன் உடனிருந்தனர்.

# நடிகை கவுதமிக்கு அ.தி.மு.க.வில் பொறுப்பு

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை,அக். 22-

நடிகை கவுதமிக்கு அ.தி.மு.க.வில் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டு உள்ளது.

நடிகை கவுதமி, பாஜகவில் மாநில பொறுப்பில் இருந்து வந்தார். இதற்கிடையே, கடந்த பிப்ரவரி மாதம் பா.ஜ.க.வில் இருந்து விலகி, எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் தன்னை அ.தி.மு.க.வில் இணைத்துக்கொண்டார். இதன் தொடர்ச்சியாக கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது அ.தி.மு.க.வுக்காக பல்வேறு தொகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டு வந்தார்.

இந்த நிலையில், கட்சியில் அவருக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் பொறுப்பு வழங்கப்பட்டு உள்ளது. அந்த வகையில் அ.தி.மு.க கொள்கை பரப்பு துணை பொதுச்செயலாளர் என்ற பொறுப்பு கவுதமிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, மேலும் சிலருக்கு கட்சியின் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத்தின் துணை செயலாளராக தடா பெரியசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கழக சிறுபான்மையினர் நலப்பிரிவு துணை செயலாளராக பாத்திமா அலியும், கழக விவசாயப்பிரிவு துணை செயலாளராக சன்னியாசியும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

### சித்தா, ஆயுர்வேதா, யுனானி படிப்புகளில்

# இடஒதுக்கீட்டில் அரசுப்பள்ளி மாணவர்கள் 97 பேருக்கு இடம்

## பொதுப்பிரிவு கலந்தாய்வு இன்று தொடக்கம்

சென்னை,அக். 22-

சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகளுக்கான கலந்தாய்வு சென்னையில் நேற்று (அக்.21) தொடங்கியது. இதில், சிறப்புப் பிரிவில் 11 இடங்களும், 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டின் கீழ் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 97 இடங்களும் நிரம்பின. பொதுப் பிரிவு கலந்தாய்வு இன்று தொடங்கி 29-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தமிழகத்தின் இந்திய மருத்துவம் - ஓமியோபதி துறையின் கீழ் சென்னை அரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை வளாகத்தில் சித்த மருத்துவக் கல்லூரி, யுனானி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் சித்த மருத்துவக் கல்லூரி, மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த கோட்டாறில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆகியவை உள்ளன.

இந்த 5 அரசுக் கல்லூரிகளில் உள்ள 330 இடங்களில், அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு 50 இடங்கள் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள 280 இடங்கள் மாநில அரசுக்கு உள்ளன. இதேபோல, 30 தனியார் கல்லூரிகளில் உள்ள 1,980 இடங்களில் 15 சதவீதம் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படுகிறது. மீதமுள்ள இடங்களில் மாநில அரசுக்கு 65 சதவீதம், நிர்வாக ஒதுக்கீட்டுக்கு 35 சதவீதம் உள்ளன. அரசு ஒதுக்கீட்டு இடங்கள், தனியார் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு மாநில அரசு கலந்தாய்வு நடத்தி வருகிறது. அரசு கல்லூரிகளின் 15 சதவீத இடங்களுக்கு மட்டும் மத்திய அரசு கலந்தாய்வு நடத்துகிறது.

சித்தா (பிஎஸ்எம்எஸ்), ஆயுர்வேதா (பிஏஎம் எஸ்), யுனானி (பியுஎம் எஸ்), ஓமியோபதி (பிஎச்எம்எஸ்) ஆகிய பட்டப்படிப்புகளுக்கு 2024-25-ம் கல்வி ஆண்டு மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ - மாணவியர் விண்ணப்பித்தனர். விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியான மாணவர்களுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்நிலையில், சென்னை அரும்பாக்கம் சித்தா மருத்துவமனை வளாகத்தில் கலந்தாய்வு நேற்று (அக்.21) காலை தொடங்கியது. முதல் நாளான நேற்று மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் வாரிசுகள், விளையாட்டு வீரர்கள் ஆகிய சிறப்புப் பிரிவினருக்கும் 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டின் கீழ் அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் கலந்தாய்வு நடைபெற்றது. இதில், 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டின் கீழ் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 97 இடங்களும் நிரப்பப்பட்டன.

அதேபோல், முன்னாள் ராணுவத்தினர் வாரிசுகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட தலா 5 இடங்களும் நிரம்பின. மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 17 இடங்களில் ஒரு இடம் மட்டும் நிரப்பப்பட்டதால், மீதமுள்ள 16 இடங்கள் பொதுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன. பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வு 22-ம் தேதி (இன்று) முதல் 29-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. மேலும் விவரங்களுக்கு www.tnhealth.tn.gov.in என்ற சுகாதாரதுறை இணையதளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

# வங்கக்கடலில் உருவானது காற்றழுத்தத்தாழ்வு பகுதி

## நாளை புயலாக வலுவடைகிறது

சென்னை,அக். 22-

மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாக தெரிவித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், நாளை புயலாக வலுவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 15-ந் தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்யத் தொடங்கியது. அதன்படி, தமிழ்நாட்டில் கடந்த 15-ந் தேதி சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மிக கன மழை பெய்தது. அந்த நேரத்தில் வங்கக்கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு மண்டலமும், வட மாவட்டங்களில் மேலடுக்கு சுழற்சியும் நிலவியதால் இந்த மழை கிடைத்தது. மேலும் தாழ்வு மண்டலம் சென்னைக்கு அருகே வரும் போது மேலும் மழை இருக்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அது பொய்த்து போனது.

இந்நிலையில் மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருக்கிறது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (செவ்வாய்க்கிழமை) தாழ்வு மண்டலமாகவும், நாளை (புதன்கிழமை) புயலாகவும் கிழக்கு மத்திய வங்கக்கடல் பகுதியில் வலுவடைய உள்ளது எனவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயலுக்கு 'டானா' என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. இந்த புயலினால் தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு இல்லை என்பதே தற்போது வரையிலான தகவலாக இருக்கிறது.

வங்கக்கடலில் உருவாகும் இந்த புயல், தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து, ஒடிசா-வங்காள தேசம் இடையே மேற்கு வங்காளத்தில் கரையை கடக்கும் என்று கணிக்கப்பட்டு இருக்கிறது. இதனால் ஒடிசா, மேற்கு வங்காளம் மாநிலங்களில் மழைக்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பருவமழை காலங்களில் புயல் உருவாகின்றன. அவ்வாறு உருவாகும் புயல்களை அடையாளப்படுத்தும் விதமாக அதற்கு பெயர்கள் சூட்டப்படும் வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. உலக வானிலை அமைப்பு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் ஆகியவற்றில் உறுப்பு நாடுகளாக வங்காளதேசம், இந்தியா, ஈரான், மாலத்தீவு, மியான்மர், ஓமன், பாகிஸ்தான், கத்தார், சவுதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஏமன் ஆகிய 13 நாடுகள் உள்ளன.

இந்த நாடுகள் வட இந்திய பெருங்கடல், அரபிக்கடலில் உருவாகும் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் சூட்டும் வகையில், ஒவ்வொரு நாடும் 13 பெயர் வீதம் தலா 169 பெயர்களை தேர்வு செய்து அளிக்கும். அதில் உள்ள வரிசைப்படி புயலுக்கு பெயர் சூட்டப்படுகின்றன. அதன்படி, தற்போது வங்கக்கடலில் உருவாக உள்ள புயலுக்கு 'டானா' என்று பெயரிடப்பட இருக்கிறது. இது கத்தார் நாடு வழங்கிய பெயர் ஆகும். டானா என்ற பெயருக்கு அரபு மொழியில் 'விலைமதிப்பற்ற அல்லது அழகான முத்து' என்று அர்த்தம்.

# தமிழகம் முழுவதும்...

### (1-ம் பக்க தொடர்ச்சி)

10,546 பேருந்துகள் இயக்கப்பட்டன. இந்தாண்டு 11,176 என்ற அளவில் கூடுதலான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப, அந்தந்த பகுதிகளில் இருந்து சென்னை வருவதற்கும் பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளாம்பாக்கத்தில் 7 முன்பதிவு மையங்களும், கோயம்பேட்டில் 2 முன்பதிவு மையங்கள் என 9 முன்பதிவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை 1 லட்சத்து 2 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். இந்த ஆண்டும் 1 லட்சத்து 20 ஆயிரம் முன்பதிவுகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# தொடர்ந்து புதிய உச்சம்...

### (1-ம் பக்க தொடர்ச்சி)

ஒரு கிராம் ரூ.107-க்கு விற்பனையானது.

கடைசி 5 நாட்கள் தங்கம் விலை நிலவரம் வருமாறு.,- 20-10-2024- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 58,240, 19-10-2024- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 58,240, 18-10-2024- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 57,920, 17-10-2024- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 57,280, 16-10-2024- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 57,200-க்கும் விற்பனையானது. கடைசி 5 நாட்கள் வெள்ளி விலை நிலவரம் வருமாறு., 20-10-2024- ஒரு கிராம் ரூ. 107, 19-10-2024- ஒரு கிராம் ரூ. 107, 18-10-2024- ஒரு கிராம் ரூ. 105, 17-10-2024- ஒரு பவுன் ரூ. 103, 16-10-2024- ஒரு கிராம் ரூ. 103-க்கும் விற்பனையானது.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், எதிர்வரும் 2024-ம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, போக்குவரத்துத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திரரெட்டி, முதன்மைச்செயலாளர் காகர்லா உஷா, ஆணையர் சுன்சோங்கம் ஜடக்சிரு, மேலாண் இயக்குநர் ஆல்பிஜான் வர்கீஸ், அனைத்து போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

# லடாக் பகுதியில் மீண்டும் ரோந்து: இந்தியா-சீனா இடையே உடன்பாடு

புதுடெல்லி,அக். 22-

கிழக்கு லடாக்கில் உள்ள அசல் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் மீண்டும் ரோந்து செல்வதற்கு இந்தியா - சீனா இடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியா- சீனா இடையே எல்லையில் பதற்றம் நீடித்து வருகிறது. கடந்த 2020-ம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கில் இருநாட்டு ராணுவ வீரர்கள் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. அருணாசல பிரதேசத்தை உரிமை கொண்டாடும் சீனா அவ்வப்போது எல்லையில் அத்துமீறுகிறது.

இதுபோன்ற காரணங்களால் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையில், கிழக்கு லடாக்கில் உள்ள அசல் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் மீண்டும் ரோந்து செல்வதற்கு இந்தியா - சீனா இடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து வெளியுறவு செயலாளர் கூறுகையில், "இந்தியா - சீனா இடையே எஞ்சியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இரு நாட்டின் பிரதிநிதிகளும் கடந்த சில நாட்களாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தனர். அதன் விளைவாக இந்தியா - சீனா இடையே இருக்கும் உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டு கோடு வழியாக ரோந்து செல்வதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது" என்றார்.

ரஷியாவில் நடக்கும் 16-வது பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி இன்று கலந்து கொள்ளும் நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. பிரிக்ஸ் உச்சி மாநாட்டின்போது, பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ்நாடு தலைமைத்தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தலைமையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்-2025 தொடர்பாக வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைத்தேர்தல் அதிகாரி சங்கர்லால் குமாவத் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு, சென்னை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள காவல் நினைவு சின்னத்தில் காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர்ஜிவால், நாடு முழுவதும் பணியின்போது வீரமரணம் அடைந்த காவலர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் விதமாக மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.



மதுரையில் பெய்த மழை காரணமாக, மேற்கு தொகுதிக்குட்பட்ட கரிசல்குளம் பாண்டியன் நகர், திருமால்நகர், அடமந்தை பகுதியில் மழைநீர் வீட்டுக்குள் புகுந்து, சாலையில் தேங்கியதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டது. இந்த தகவல் அறிந்த முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. மழைநீரில் நடந்து சென்று, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து மழைநீரை விரைந்து வெளியேற்றுமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்தார். அருகில் மேற்கு 6-ம்பகுதி அ.தி.மு.க. செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன், டாக்டர் வி.பி.ஆர்.செல்வகுமார், நீதிகாந்த், மலர்விழி, வட்ட செயலாளர்கள் நாராயணன் விஜயகுமார், மற்றும் உமாசங்கர், கருப்பையா, வணங்காமுடி ஆகியோர் உடனிருந்தனர்.